இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 69 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 01 – புதன்கிழமை 18 அக்டோபர் 2023 – மதுரை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 69: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 01 - Wednesday 18 October 2023 - Madurai 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2023) "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள வருகை பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2023) "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 'கள ஆய்வில் முதலமைச்சர்' திட்ட ஆய்வுக்குச் செல்லும் வழியில் காட்டாங்கொளத்தூர்

# ஒன்றிய அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு!

## பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவு!

**செங்கல்பட்டு, அக். 18 - "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்குச் செல்லும் வழியில் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

மாவட்டங்களுக்குச் சென்று நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன் முறையாக வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து 1.2.2023 மற்றும் 2.2.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 15.2.2023 மற்றும் 16.2.2023 ஆகிய தேதிகளில் சேலம் மாவட்டத்திலும், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக 5.3.2023 மற்றும் 6.3.2023 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்திலும், விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 26.4.2023 மற்றும் 27.4.2023 ஆகிய தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திலும், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 25.8.2023 மற்றும் 26.8.2023 ஆகிய தேதிகளில் நாகப்பட்டினத்திலும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**காட்டாங்கொளத்தூர் ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு!**

அதன் தொடர்ச்சியாக நேற்று (17.10.2023) செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு செல்லும் வழியில், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, அலுவலகத்தின் வருகை பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 66 மையங்களில் சுமார் 5000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு தரமான உணவினை உரிய நேரத்தில் வழங்கப் படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.**

**குடிநீர் பிரச்சினைக்கு முன்னுரிமை!**

இந்த ஊராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 66 மையங்களில் சுமார் 5000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு தரமான உணவினை உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். மேலும், இந்த ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட வேண்டும் என்றும், குடிநீர் விநியோகப் பணிகள், பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டடங்களை சீரமைத்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்த மாணவியிடம், முதலமைச்சர் அவர்கள் "புதுமைப் பெண்" திட்டத்தின் கீழும் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### மத்திய பிரதேசம் தேர்தல்:

## காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கை!

### கமல்நாத் வெளியிட்டார்!

*போபால், அக். 18 - மத்திய பிரதேசம் மாநில சட்டசபை தேர்தல் நவம்பர் 17ம் தேதி நடைபெற உள்ளது. ஆட்சியைக் கைப்பற்றுவதில் காங்கிரஸ், பா.ஜ.க. கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.*

*இதற்கிடையே, 230 சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் முதல் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை காங்கிரஸ் கட்சி சமீபத்தில் அறிவித்தது.*

*இந்நிலையில், தலைநகர் போபாலில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் முதல் மந்திரியும், மாநில தலைவருமான கமல்நாத் தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டார்.*

*500 ரூபாய்க்கு கியாஸ் சிலிண்டர், பள்ளி மாணவர்களுக்கு இலவச கல்வி, பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவது, வேலையில்லா இளைஞர்களுக்கு உதவித் தொகை உள்பட பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளது.*

---

### சிறை கைதிகள் விடுதலை: 49 கோப்புகளுக்கு

## ஆளுநர் இன்னும் ஒப்புதல் வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளார்!

### சட்டத்துறை அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு!

சென்னை, அக். 18 - 2023-2024ம் கல்வி யாண்டில் தமிழ்நாட்டில் உள்ள 11 அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள 21 முதுநிலை பாடப்பிரிவுகளுக்கு 420 இடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இந்நிலையில், தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதுநிலை சட்டப் படிப்பில் சேருவதற்கான, தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவ, மாணவியருக்கும் மின்னஞ்சல் மூலம் ஒதுக்கீடு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரகுபதி, நீண்டகால சிறைவாசிகள் விடுதலை தொடர்பாக 49 கோப்புகள் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், இன்னும் ஒப்புதல் வழங்காமல் நிலுவையில் வைத்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த கோப்புகளில் ஆளுநர் கையெழுத்து போடமாட்டார் என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கூறியது பற்றிய செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஆளுநரும் அண்ணாமலையும் ஒன்றுதான் என்று மீண்டும் நிரூபித்து இருப்பதாக விமர்சித்தார்.

கேள்வி: நீண்ட கால சிறைவாசிகளை விடுதலை செய்ய தமிழக அரசு அனுப்பிய கோப்புகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்கமாட்டார் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறி இருக்கிறாரே?

பதில்: அதாவது ஆளுநரும், அண்ணாமலையும் ஒன்று என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவ்வளவுதான். ஆளுநர் தான் அண்ணாமலை. அண்ணாமலைதான் ஆளுநர்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### அக். 24ம் தேதி அன்று

## அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கும்!

*சென்னை, அக். 18 - அக்டோபர் 24ம் தேதி விஜயதசமி அன்று அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது. பராமரிப்பு பணி காரணமாக செவ்வாய் விடுமுறை அளிக்கப் படும் நிலையில், அக்டோபர் 24ல் வழக்கம் போல் இயங்கும் என வண்டலூர் நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*விஜய தசமியை முன்னிட்டு அக்டோபர் 24ம் தேதி செவ்வாய் அன்று வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா செயல்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது. சென்னை வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கி வருகிறது. இங்கு வார நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் ஏராளமானோர் குடும்பத்துடன் வந்து செல்கின்றனர்.*

*இந்தியாவின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா வண்டலூர் உயிரியல் பூங்காவாகும்.*

*உலகின் பல்வேறு பகுதியில் இருந்து இந்தப் பூங்காவைச் சுற்றிப் பார்க்க ஆண்டுதோறும் 20 லட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர் என அதன் நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 18-10-2023

# ‘இந்தியா’ பாராட்டிய தமிழ்நாடு

திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி சார்பில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஏற்பாட்டில் நடந்த மகளிர் உரிமை மாநாட்டில் இந்தியா முழுவதும் இருந்து வருகை தந்த பல்வேறு கட்சித் தலைவர்கள், தமிழ்நாட்டைக் கொண்டாடினார்கள்.

**திராவிட இயக்கம் - தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் - திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரை பாராட்டிப் பேசினார்கள். இந்தியா முழுமைக்கும் வழிகாட்டும் ஆட்சியாக தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சி அமைந்திருந்ததை யும் - இப்போது மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சி நடைபெற்று வருவதையும் மனப்பூர்வமாக வழிமொழிந்திருக்கிறார்கள்.**

அன்னை சோனியா காந்தி அம்மையார் பேசும்போது, “பெண்களின் முன்னேற்றத்திற்கு அண்ணா, கலைஞர் அரசுகளே முன்னெடுப்புகளை மேற்கொண்டன. இந்தியாவுக்கே அண்ணா, கலைஞர் ஆட்சிகள் ஒளி விளக்காக திகழ்கின்றன. ஐந்து முறை முதலமைச்சராக இருந்த கலைஞர் ஆட்சியில்தான் காவல் துறையில் பெண்கள் நியமிக்கப்பட்டனர். இன்று காவல்துறையில் நான்கில் ஒரு பங்கினர் பெண் காவலர்கள் தி.மு.க. ஆட்சியில்தான் இருக்கிறார்கள். அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்கு தி.மு.க. அரசு கொண்டுவந்துள்ள திட்டங்கள் ஏராளம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் தாய்சேய் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது” என்று வரிசையாக அடுக்கினார்.

ஜம்மு – காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி பேசும் போது, “இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய் என தி.மு.க. அரசின் திட்டங்கள் மகத்தானவை. கட்சி, மதம் என பாரபட்சமின்றி அனைவருக்கும் பொது வாக மகளிர் நலதிட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் என்பது பெண்களுக்கு ஒரு மிகப்பெரிய கொடையாகும். பெண் சிசு கொலை, பாலியல் தொல்லை, குடும்ப வன்முறை, வரதட்சனை என பல்வேறு அடக்கு முறைகளை பெண்கள் சந்தித்தனர். பெண்கள் சந்தித்த அனைத்து அடக்கு முறை களுக்கும் எதிராக குரல் கொடுத்தவர் கலைஞர். அவர் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார்” என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி பேசும்போது, “நூறு ஆண்டுகளுக்கு முன்பே தந்தை பெரியார் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற புத்தகத்தை எழுதினார். சமூக மாற்றத்திற்கான புரட்சி இங்கே தான் உருவானது. ஆனால் நூறு ஆண்டுகளுக்கு பிறகும் இப்போதும் பெண் ஏன் அடிமையாயிருக்கிறாள் என்றே கேட்கும் நிலை உள்ளது. சமூக, பொரு ளாதார அடிப்படையில் பெண்கள் அடிமை யாக்கப்பட்டதற்கு எதிராக ஏராளமான கட்டுரை களை எழுதியவர் பெரியார். அவர் வழியில் அண்ணா, கலைஞர் ஆகியோர் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தனர். சமூக மாற் றத்திற்கான புரட்சி தமிழ்நாட்டில்தான் உருவானது” என்று குறிப்பிட்டார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சுபாஷினி அலி பேசும் போது, “சுதந்திரத்திற்கு முன்பே மனுவுக்கு எதிராக குரல் கொடுத்த இயக்கம் தமிழ்நாட்டின் நீதிக் கட்சி ஆகும். சமத்துவத்திற்கான போராட்டம் தமிழ்நாட்டில் தான் துவங்கி யது. அதனை வழி நடத்தியவர் பெரியார். 1954ம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நான் நேரில் பார்த்திருக்கி றேன். பெண்களுக்கு சொத்தில் உரிமை உள்ளிட்ட பல அரிய திட்டங்களை முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.க.அரசு தான் கொண்டு வந்தது. சமூக நீதி, பாலின நீதி, பொருளாதார நீதி ஆகியவை மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமானது. சமத்துவ முழக்கத் திற்காக ‘முரசொலி’யைக் கொண்டு வந்த மிகச்சிறந்த பத்திரிகையாளர் முத்தமிழறிஞர் கலைஞர்” என்று குறிப்பிட்டார்.

தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, “பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களை நினைவு கூர்ந்து என் உரையை துவக்குகிறேன். தமிழ் நாட்டின் உரிமைக்காக தமிழின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தி.மு.க. எப்போதும் குரல் கொடுத்து வந் திருக்கிறது. கூட்டாட்சிக்காக தமிழ்நாடு குரல் கொடுத்து வருவதை பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். தமிழுக்கும் மராட்டிக்கும் இரண்டு ஒற்றுமைகள் உள்ளன. ஒன்று தமிழிலும் மராட்டியிலும் ல, ள, ழ உள்ளன. இது மிகச் சிறப்பு. இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டங்களில் மிகவும் சிரத்தை யுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பது பாராட்டுக்குரி யது. தமிழ்நாட்டில் பெண்கள் நலனுக்காக நிறைவேற்றி வரும் திட்டங் களுக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை பாராட்டுகிறேன்” என்றார்.

இந்திய கம்யூ. கட்சியின் ஆனி ராஜா பேசும்போது, “மக்களுக்கான நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் சிறப்பான வெற்றி கண்டவர் கலைஞர். பாலின சமத்துவம், மகளிர் உரிமைக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் ரெட் சல்யூட். கலைஞர் நூற்றாண்டு விழா மட்டுமல்ல, அவரது வாழ்க்கையே கொண்டாடப்பட வேண்டிய விழாதான். பெண்களின் முன்னேற்றத்திற்காக ஏராளமான உரிமைகளை கலைஞரும் தி.மு.க.வும் பெற்றுத் தந்திருக்கிறது” என்றார்.

சமாஜ்வாதி கட்சி எம்.பி.யான டிம்பிள் யாதவ் பேசும்போது, “தமிழ்நாட்டின் சிறந்த அடையாளமாக திகழ்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். சுதந்திர தின விழாவில் மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியேற்றும் உரிமையை பெற்றுத்தந்தவர். பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அதிகரித் தவர். சமூக நீதிக்காக இடைவிடாத போராட்டம் மேற்கொண்டவர். மகளிர் உரிமை, பாலின சமநிலை, பெண்களுக்கு சொத்தில் உரிமை என பல்வேறு திட்டங்களிலும் சமாஜ்வாதி கட்சி அரசுக்கு தமிழ்நாடுதான் முன்மாதிரி. பெண்கள் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்திலும் தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது” என்றார்.

பீகார் அமைச்சர் லெஷி சிங் பேசும் போது, “தமிழ்நாட்டைப் போலவே பீகாரிலும் மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை நிதிஷ் குமார் அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சிக்காலத்தில் பெண் கள் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினார்” என்றார்.

திரிணாமூல் காங்கிரஸ் செய்தி தொடர் பாளர் சுஷ்மிதா தேவ் பேசும் போது, “தமிழ்நாட்டில் மிக நீண்ட காலம் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர். சமூக நீதி, சமத்துவத்திற்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் கலைஞர். மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ் நாட்டின் தி.மு.க. அரசு முன்னணியில் உள்ளது” என்றார்.

**இப்படி ஒட்டுமொத்த ‘இந்தியா’வும் தமிழ்நாட்டுக்கு எடுத்த பாராட்டுவிழாவைப் போல அமைந்திருந்தது மகளிர் உரிமை மாநாடு.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2023) அண்ணா அறிவாலயத்தில், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் மகளிர் உரிமை மாநாடு சிறப்பாக நடைபெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டத்தில்

## பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

*சிவகங்கை, அக். 18-*

சிவகங்கை மாவட்டத்தில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள் 4270 மாணவர்களுக்கும், 6273 மாணவிகளுக்கும் மொத்தம் 10593 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் 68 அரசு மேல்நிலைப் பள்ளிகள், 105 அரசு உதவி பெறும் மேல்நிலை உதவி பெறும் பள்ளிகள் ஆக மொத்தம் 173 பள்ளிகளுக்கு மிதிவண்டிகள் 2022 - 2023 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான 2023 - 2024 மிதிவண்டிகளும் விரைவில் வழங்கப்பட உள்ளது.

சிங்கம்புணரி ஒன்றியம் பிரான்மலை பாரிவள்ளல் மேல்நிலைப் பள்ளி கிருங்காகோட்டை மேல்நிலைப் பள்ளியில் 107 மிதிவண்டிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சிக்கு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணைத்தலைவர் இந்தியன் செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் பூமணி கே.பால சுப்பிரமணியன், சிவபுரி சேகர், மனோகரன், பாஸ்கரன், புகழேந்தி, பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், வட்டாட்சியர் சாந்தி உட்பட அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.10.2023) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, “மகா கவிதை” நூல் வெளியீட்டு விழா தொடர்பாக கலந்துரையாடினார்.

## புதுச்சேரியில் திடீரென நிறம் மாறிய கடல் பகுதி!

*புதுச்சேரி, அக். 18 –*

புதுச்சேரி தலைமைச் செயலகம் எதிரே கடல் பகுதி செம்மண் நிறமாக மாறியது தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

புதுச்சேரி கடற்கரைக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து அலையை ரசித்து செல்வார்கள். கோவளம் கடற்கரைக்கு அடுத்தபடியாக சுற்றுலா பயணிகள் பெரிதும் விரும்புவது புதுச்சேரி கடற்கரையாகும்.

இந்த நிலையில் நேற்று வழக்கம் போல புதுச்சேரி கடற்கரையில் சுற்றுலா பயணிகள் வந்து இருந்தனர். அப்போது திடீரென புதுச்சேரி தலைமைச் செயலகம் எதிரே உள்ள கடல் பகுதியில் செம்மண் நிறத்தில் மாறியிருந்தது.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் கடலில் செம்மண் பரவி இருந்ததால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். செம்மண் நிறமாக மாறியிருந்த கடலின் அழகை சுற்றுலா பயணிகள் பார்த்த வண்ணம் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

இதுதொடர்பாக மீனவர்கள் ஆரோவில் பகுதியில் அதிக மழை பொழிவு காரணமாக அங்குள்ள செம்மண் சரிந்து நீர் கடலில் கலந்திருக்கும் என்றும், மீண்டும் இது நீல நிறமாக மாறும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கடல் நிறம் மாறியதற்கான காரணம் என்ன என்று சுற்றுச்சூழல் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.



முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்! அக்டோபர் 22 - ஞாயிறு அன்று

# திருவண்ணாமலையில் - வடக்கு மண்டல வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 22-03-2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு. கழக மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மேற்கண்ட தீர்மானங்களின்படி, கழகத்தில் மொத்தம் இரண்டு கோடி உறுப்பினர்களை வெற்றிகரமாகச் சேர்த்து, ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாகச் சரிபார்க்கப் பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரை யின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடிப்

பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப் பட்டு, கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் காங்கேயத்தில் முறையே டெல்டா ,தென் மற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடை பெற்று முடிந்ததைத் தொடர்ந்து, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" வருகிற அக்டோபர் 22 அன்று திருவண்ணாமலை மாவட்டம் 606611, திருவண்ணாமலை ஒன்றியம், மலப்பாம்பாடி ஊராட்சியில் உள்ள அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள "கலைஞர் திடலில்", முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடை பெற உள்ளது.

வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 13 கழக மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்க ளுக்குட்பட்ட 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பா ளர்கள் (BLA 2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

1. திருவண்ணாமலை வடக்கு
2. திருவண்ணாமலை தெற்கு
3. தர்மபுரி கிழக்கு
4. தர்மபுரி மேற்கு
5. கள்ளக்குறிச்சி வடக்கு
6. கள்ளக்குறிச்சி தெற்கு
7. கிருஷ்ணகிரி கிழக்கு
8. கிருஷ்ணகிரி மேற்கு
9. திருப்பத்தூர்
10. இராணிப்பேட்டை
11. வேலூர்
12. விழுப்புரம் வடக்கு
13. விழுப்புரம் தெற்கு

"அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 16-10- 2023.

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.




சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்று முன்தினம் (16.10.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் செவிலியர், தாதியர் குழுமம் இணைந்து நடத்தும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில், சவுதி அரேபிய அமைச்சகத்தின் செவிலியர் பணிக்கு தேர்ச்சி பெற்ற செவிலியர்களுக்கு சவுதி அரேபியா செல்வதற்கு பயணக் கோப்பினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவன நிர்வாக இயக்குநர் முனைவர் மகேஸ்வரன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.10.2023), சென்னை, சைதாப்பேட்டையில், கனமழையின் காரணமாக பெட்ரோல் பங்கின் மேற்கூரை இடிந்து விபத்தில் காயமடைந்தவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து, ஒரு வாரத்திற்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 8 நபர்களுக்கு தலா ரூ.12.700–ம் 3 நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 3 பேருக்கு தலா ரூ.4,300–ம் விபத்தில் இறந்த ஒருவரின் குடும்பத்தினருக்கு ரூ.4,00,000/ வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கியூரி, மாம்பலம் வட்டாட்சியர் திருமதி.பாலாஜி பாரதி, மாமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், மோகன்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியளவில்

# கலைஞர் நூற்றாண்டு விழா மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

## டாக்டர் எ.வ.வே.கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து மாணவர்களுக்கு பரிசளித்தனர்!

*திருவண்ணாமலை, அக். 19 -*

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப்போட்டி திருவண்ணாமலையில் நடைபெற்றது. திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியினை டாக்டர் எ.வ.வே. கம்பன், கு.கருணாநிதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்றும், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி, திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பொறியியல் மாணவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பேச்சுப் போட்டி நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு, கலசப்பாக்கம், செங்கம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில், தொகுதி வாரிய போட்டிகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து...

16.10.2023 திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொறியியல் கல்லூரி, தொழிற்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்கள் பங்கேற்கும் மாபெரும் பேச்சுப்போட்டி நடைபெற்றது.

பேச்சுப்போட்டிக்கு பொறியாளர்அணி மாவட்ட அமைப்பாளர் சி.ராம்காந்த் தலைமை வகித்தார்.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் ச.பிரகாஷ், மு.தினேஷ்பாபு, த. ரகுபதி, தா.சண்முகம், டி. என்.பி.வினோத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் அ.மோகன்ராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்டு கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பேச்சுப்போட்டியினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். கலந்து கொண்ட மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி வாழ்த்தி பேசினார்.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணை செயலாளரும் செங்கம் சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ. கிரி ஆகியோர் மாணவர்களை வாழ்த்தி பேசினர்.

" 'தொழில்நுட்ப கல்விக்குத் தோள்கொடுத்த கலைஞர்', தொழில்துறையை உயர்த்திய தமிழினத் தலைவர்', திராவிட மாடலும் திறன்மிக்கக் கல்வியும்', தெற்குச்சூரியன்', கலைஞரும் தமிழும்'" ஆகிய ஐந்து தலைப்புகளில் பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது.

பேச்சுப்போட்டியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பொன்.தனுசு, ஜெ.மெய் கண்டன், ஏ.டபள்யு.சர்கார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, பி.கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, பெ. கோவிந்தன், த.செந்தில்குமார், இரா.ராஜேந்திரன், பேரூர் செயலாளர் மு.அன்பழகன், பொதுக்குழு உறுப்பிர் க.பிரபாகரன், மோட்டூர் பாலு, ஒன்றியக்குழுத் தலைவர் தமயந்திஏழுமலை, மாவட்ட துணை அமைப்பாளர் டி. எம்.கலையரசன், நகர துணை செயலாளர் வட்டி அருணாசலம், ஆ.தே.முருகையன், ஆர்.வெங்கடேஷ் மற்றும் பேச்சுப்போட்டியில் இளங்கலை, முதுகலை பயிலும் பொறியியல் மாணவர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், தொழிற்பயிற்சி மைய மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பேச்சுப்போட்டியின் நடுவர்களாக பேச்சருவி கு. சபரி, பேராசிரியர் சு.பிரேம் குமார், பேராசிரியர் கு. லட்சுமி, அஜ்மல் (எ) முத்தமிழன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியினை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன் தொகுத்து வழங்கினார்.

பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகளும், சிற்றுண்டி மற்றும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சட்டமன்ற அளவில் முதல் பரிசு ரூ.10,000/மும், இரண்டாவது பரிசு ரூ.5,000/மும், மூன்றாவது பரிசு ரூ.3,000/மும் வழங்கப்படவுள்ளது. சட்டமன்றத் தொகுதியளவில் வெற்றி பெறும் போட்டியாளர்கள், மண்டல அளவிலான போட்டிகளுக்கும், மண்டல அளவில் வெற்றிபெறும் போட்டியாளர்கள் மாநில அளவிலான போட்டிகளுக்கும் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இறுதிச் சுற்றில் வெல்பவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் ரூ.5 இலட்சம் பரிசும், சுழற்கோப்பையும் பெறுவார்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் து.மணியரசு நன்றி கூறினார்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.



முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம் சேலம் ஓட்டல் ரேடிசனில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டம் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன், அருள்மொழி, கே.எம்.தண்டபாணி, தாமரைச் செல்வன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சரவணன், கவிகணேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

ஏழை, எளியோர் நலன் காப்பதில்

# இந்தியாவிற்கே முன்னோடியாக திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

*புதுக்கோட்டை, அக்.18-*

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் வருவாய் துறையின் சார்பில் 59விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை அமைச்சர் எஸ்.ரகுபதி 13.10.2023 அன்று வழங்கினார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது: -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளியோர் நலன் காப்பதில் ஏராளமான நலத்திட்டங்களை இந்தியாவிற்கே முன்னோடியாக தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்றால் அது மிகையல்ல. இத்தகைய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஏழை, எளிய பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. அதன்படி, வருவாய் துறையின் சார்பில், விளிம்பு நிலை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ், அவர்களின் நீண்ட கால கனவினை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், கடையக்குடி ஊராட்சி, பெருங்குடி கிராமத்தில் விளிம்பு நிலையில் உள்ள 59 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளிகளுக்கு விலையில்லா வீடுகள் கட்டி தருவதற்கு உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.எனவே பொதுமக்கள், அனைவரும் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற பல்வேறு நலத் திட்டங்களை உரிய முறையில் பெற்று முன்னேற்றம் அடைய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா. செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு(எ)சிதம்பரம், வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிங்காரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

# சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 275ஆவது கூட்டம்!

## குழுமத்தின் நடவடிக்கைகள் குறித்து முக்கிய முடிவுகள்!

*சென்னை, அக். 18 -*

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (16.10.2023) சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் 275 ஆவது குழுமக் கூட்டம் நடைபெற்றது.

இக்குழுமக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைச்சர் அவர்களால் 2023-2024ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் 27 திட்டங்களுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும், புதிதாக கட்டப்பட்டு வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் சாலை வசதிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் அமைப்பதற்கு நிதி ஒப்புதல் வழங்குவது குறித்தும்,

சென்னை பெருநகர எல்லைக்குள் நில உபயோக மாற்ற விண்ணப்பங்களின் மீது பரிசீலிப்பது குறித்தும் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.




தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (17.10.2023) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் சரவணவேல்ராஜ், சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, நகர ஊரமைப்பு இயக்க துறை இயக்குநர் கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பி.சங்கர், நிதித்துறை துணை செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், வாரிய நிதி ஆலோசகர் கோவிந்தராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வீட்டு வசதி வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் குலாம் ஜிலானி பாப்பா, மாவட்ட வருவாய் அலுவலர்(திட்டங்கள்) திருமதி. ஃபர்கத் பேகம், மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அன்பழகன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## வெளிநாட்டுப் பணி முடிந்து தமிழ்நாட்டில் வந்து பணியாற்றிட வேண்டும்!

# கொரோனா காலத்தில் செவிலியர்கள் ஆற்றிய பங்களிப்பு போற்றுதலுக்குரியது!

## தேர்ச்சிப் பெற்ற செவிலியர்களுக்கு பயணக் கோப்புகளை வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, அக். 18 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2023) சென்னை கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் செவிலியர், தாதியர் குழுமம் இணைந்து நடத்திய வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்து, சவுதி அரேபியா அமைச்சகத்தின் செவிலியர் பணிக்கு தேர்ச்சிப் பெற்ற செவிலியர்களுக்கு சவுதி அரேபியா செல்வதற்காக பயணக் கோப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற சவுதி அரேபிய அமைச்சகத்தின் செவிலியர் பணிக்கான நேர்காணலில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக கலந்து கொண்டு தேர்ச்சி பெற்ற செவிலியர்களுக்கு, சவுதி அரேபியா செல்வதற்கு பயணக் கோப்புகள் வழங்கப்பட்டது. மேலும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் பணிக்காலியிடங்கள் குறித்தும், வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் குறித்தும், பாதுகாப்பு மற்றும் சட்டப்பூர்வ இடப்பெயர்வு குறித்தும், செவிலியர்களுக்கான உலகளாவிய வேலைவாய்ப்பு குறித்தும், IELTS/OET பயிற்சியளிக்கும் பயிற்சி நிறுவனங்கள் மூலம் இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு செவிலியர் பணிக்கு செல்வதற்கான சிறப்பு மொழித் தேர்வினை பற்றிய விவரங்கள் குறித்தும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சுமார் 960க்கும் மேற்பட்ட இறுதியாண்டு பயிலும் செவிலிய மாணவர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு அரசின் Overseas Manpower Corporation (OMC) மற்றும் Tamil Nadu Nurses and Midwives Council சார்பில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய இந்த ஒருநாள் விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சி மிக மிக அவசியமான நிகழ்ச்சி. குறிப்பாக Nursing படிக்கின்ற மாணவிகளுக்கும், செவிலியர்களுக்கும் பயனுள்ள வகையில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ள சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அண்ணன் செஞ்சி மஸ்தான் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

எவ்வளவோ பணிகள் இருந்தாலும், மருத்துவத்துறை பணி என்பது சமூகத்துக்கு செய்கின்ற சேவையாகும். அதிலும், குறிப்பாக செவிலியர் பணி என்பது இன்னும் மேன்மையானது. நான் பல இடங்களுக்கு அரசு நிகழ்ச்சிகளுக்காக செல்கிறபோது, அரசு மருத்துவமனைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்வது வழக்கம். அதிகாரிகளுடன் இரவு 11 மணிக்கு சென்றாலும், 12 மணிக்கு சென்றாலும், அங்கு செவிலியர்களான நீங்கள் தான் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருப்பீர்கள்.

**கொரோனா காலத்தில் சிறப்பான பணி!**

ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார் என்றால், மருத்துவர்கள் என்ன நோய் என்று கண்டுபிடிப்பார்கள், மருந்து மாத்திரை கொடுப்பார்கள். ஆனால், செவிலியர்கள் தான் ஒரு நோயாளி discharge ஆகிற வரை உடன் இருந்து அந்த நோயாளியை குணப்படுத்துவதற்கு தேவையான அத்தனை மருத்துவப்பணிகளையும் செய்வார்கள்.

கொரோனா நேரத்தில் செவிலியர்கள் ஆற்றிய பங்களிப்பு என்பது போற்றுதலுக்குரியது. குடும்பத்தை விட்டு - PPE Kits ஐ அணிந்து கொண்டு நாள் முழுவதும் மக்களை காக்க உயிரை பணையம் வைத்து சேவையாற்றியவர்கள் நீங்கள். அதனால், தான் கழக அரசு செவிலியர்களுக்கு கொரோனா நேரத்தில் ரூ.20 ஆயிரத்தை சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கியது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட கல்வி சீர்திருத்தங்களால், இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் ஏராளமான செவிலியர் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அந்தக் கல்லூரிகளில் எல்லாம் ஆயிரக்கணக்கான மாணவிகள், ஏன் மாணவர்களும் செவிலியர் படிப்பை படித்து வருகின்றார்கள். மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறக்கிற பெண், அந்தக் குடும்பத்தை காக்கின்ற வகையில் உடனே பணிக்கு செல்ல வேண்டுமென்றால், 10ஆம் வகுப்பு முடித்துவிட்டு, டிப்ளமோ செவிலியர் படிப்பு முடித்தால், உடனே பணிக்கு சேர முடியும். குடும்பத்தை காப்பாற்ற முடியும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், படித்தால் நிச்சயம் வேலை உறுதி என்கிற படிப்புகளில் Nursingம் ஒன்று. அப்படிப்பட்ட செவிலியர் படிப்பை படிக்கின்ற நீங்கள்,



அதிக ஊதியத்துடன் பணிபுரிய வேண்டும்.

வெளிநாட்டில் உள்ள உயர்சிறப்பு மருத்துவமனைகளில் பணிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் கழக அரசு செயல்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத் தான் இன்றைக்கு, இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. Overseas Manpower Corporation (OMC) மற்றும் Tamil Nadu Nursing and Midwives Council நடத்துகிற இந்த ஒரு நாள் விழிப்புணர்வு முகாமில், செவிலியர்கள் எப்படி அயல்நாட்டு பணிகளுக்கு செல்வது என்பது குறித்து பல்வேறு அக்கப்பூர்வமான அறிவுரைகள் வழங்கப்படவுள்ளன.

**உலக அளவில் செவிலியர்களுக்கு வேலை வாய்ப்புகள்!**

குறிப்பாக, விசா பெறுவது, வெளிநாட்டில் உள்ள பாதுகாப்பு, சட்டப்பூர்வ இடப்பெயர்வு, உலக அளவில் செவிலியர்களுக்கு உள்ள வேலைவாய்ப்புகள், வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியத்தின் செயல்பாடுகள் குறித்தெல்லாம் இங்கே உங்களிடம் அந்தந்த துறைகளை சேர்ந்த வல்லுநர்கள் உரையாற்றவுள்ளார்கள்.

செவிலியர் படிப்பை முடித்ததும் நீங்கள் பல்வேறு வெளிநாடுகளுக்கு செல்லலாம். குறிப்பாக ஐக்கிய அரபு நாடுகளில் அதிக வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. இங்கிலாந்து மாதிரியான ஐரோப்பிய நாடுகள் - தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்தியாவில் பயின்ற செவிலியர்களுக்கு மிகப் பெரிய அளவில் வரவேற்பு உள்ளது. இப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் விண்ணப்பிக்கும் போது, திறன் ரீதியாக வெவ்வேறு மாதிரியான தேவைகளை அந்தந்த நாடுகள் எதிர்பார்க்கின்றன. உதாரணத்துக்கு இங்கிலாந்து செல்கிறீர்கள் என்றால் Occupational English Test எனப்படும் OET தேர்வை நீங்கள் எழுத வேண்டும். இது போன்ற பயனுள்ள விஷயங்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சியில் உங்களுக்கு எடுத்துக் கூறப்படவுள்ளன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் - அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துடன் இணைந்து OET Coaching Classesஐ நடத்தி வருகிறது. அதையெல்லாம் நீங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடிக்கடி, OMCன் இணையதளத்துக்கு சென்று அங்கு பதியப்படும் வேலைவாய்ப்பு தகவல்களை தெரிந்து கொள்ளுங்கள். செவிலியர் பணி என்றாலே பெரும்பாலும் - பெண்கள் தான் இருப்பார்கள். எனவே, நீங்கள் வெளிநாடு சென்று நல்ல மருத்துவமனையில் பணியாற்றுகிற போது, உங்கள் குடும்ப பொருளாதாரமும் உயரும். பெண்கள் பொருளாதார சுதந்திரத்தை அடைய முடியும்.

இந்த அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை பொறுத்தவரை, 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வெளிநாட்டு வேலைகளை இதுவரை பெற்றுக் கொடுத்துள்ளது. இடைத்தரகர்கள் - ஏஜண்டுகளிடம் மாட்டிக்கொண்டு பணத்தை இழக்காதீர்கள். அப்படியே ஏஜண்டுகள் மூலம் வெளிநாட்டுக்கு வேலை செல்கிறீர்கள் என்றாலும், உங்களை பணிக்கு சேர்த்தவுடன் நகர்ந்து விடுவார்கள். ஆனால், தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அப்படியல்ல. ஏஜண்டுகளிடம் நீங்கள் பல இலட்சம் பணம் கொடுத்து தான் வெளிநாடு செல்ல முடியும். ஆனால், இது அரசு நிறுவனம் என்பதால், 2 இலட்சம் ரூபாய் ஊதியத்தில் பணிக்கு சேர வேண்டும் என்றால் கூட, அதிகபட்சம் 35 ஆயிரம் வரை செலுத்தினால் மட்டும் போதும்.

மேலும், வெளிநாட்டு வேலைக்கு செல்ல விண்ணப்பிப்பதில் ஆரம்பித்து, அங்கு தங்குவது, பணிக்கு சேருவது - திரும்பி வருவது என அத்தனை நடைமுறையிலும் தமிழ்நாடு அரசு உங்களுக்கு துணையாக நிற்கும். இங்கு வந்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும், நிச்சயம் வெளிநாட்டு வேலைக்கு செல்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இதற்கான உதவிகளை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் நிச்சயம் உங்களுக்கு செய்யும். இன்றைய நிகழ்ச்சியும் அதற்கு உங்களுக்கு பயனுள்ள வகையில் அமையும்.

இந்த நேரத்தில் நான் ஒரேயொரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். நீங்கள் வெளிநாடு செல்லுங்கள். கைநிறைய ஊதியம் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால், ஒரு கட்டத்துக்கு பிறகு, நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்து இங்கு மருத்துவ சேவையாற்ற வேண்டும். Overseas Manpower Corporationக்கும் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். OMCஐ நாடி வருகிறவர்களுக்கு நம்பிக்கையாக பதில் அளியுங்கள். விளக்கங்களை கூறுங்கள். வழக்கமான அரசு அலுவலகம் போல தான் இதுவும் என்று யாரும் எண்ணிவிடக்கூடாத அளவுக்கு நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விழிப்புணர்வு பயிற்சி முகாமில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள். அரசுடன் இணைந்து இந்த நிகழ்ச்சியை சிறப்புடன் நடத்துகிற தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் கவுன்சிலுக்கு என் பாராட்டுகள். இங்கு வந்துள்ள செவிலியர்கள் - செவிலியர் மாணவிகள், உங்கள் அனைவரின் வெளிநாட்டுப்பணி கனவு வெல்லட்டும்.

நீங்கள் உங்கள் வாழ்வில் வெற்றிபெற முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். நம் திராவிட மாடல் அரசு உங்களுக்கு பக்கபலமாக இருக்கும் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் இளைஞர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன நிர்வாக இயக்குநர் முனைவர் சி.நா.மகேஷ்வரன், துணை மேயர் மு.மகேஷ்குமார், வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை ஆணையாளர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், குடிப்பெயர்வோர் பாதுகாப்பு அலுவலர் மு.ராஜ்குமார், தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தின் பதிவாளர் முனைவர் ஆனி கிரேஸ் கலைமதி, சென்னை மருத்துவக் கல்லூரி அரசு செவிலியர் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.சங்கர் சண்முகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமை!

## வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர், அக்.18-

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலு விஜயன், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.பாண்டியன், ஜி.எஸ். அரசு, மலர் விழிலோக நாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில் குமார், ஒன்றிய குழு தலைவர் அமுதா ஞானசேகரன், செயற்குழு உறுப்பினர் ஏ.ஜி.ஆறுமுகம், பொதுக்குழு உறுப்பினர்கள் வீ.தயாநிதி, எஸ்.கதிரேசன், ஜி.ரமேஷ், மா.ப.அன்புநிதி, சி.சந்திரசேகரன், ஏ.ஆர். முன்னாஷெரீப், மாநில நிர்வாகிகள் சி.ஞானசேகரன், என்.சுப்பிரமணி, சேர்க்காடு கென்னடி, பகுதிச் செயலாளர்கள் என்.பரமசிவம், வன்னியராஜா, எம்.ஏ. கணேஷ்சங்கர், ஆர்.பி.இ. சசிக்குமார், எஸ்.தயாள் ராஜ், வீ.ஜி.கே.சுந்தரவிஜி, ஆர்.சத்தியமூர்த்தி, ஜி.பால முரளி கிருஷ்ணா, சி.எம். தங்கதுரை, ஆர்.கே.ஐயப்பன், தி.அ.முனவர்

பாஷா, பி.முருகபெருமாள், வேலூர் ஒன்றியச் செயலாளர் சி.எல்.ஞான சேகரன், நகரச் செயலாளர்கள் குடியாத்தம் சவுந்தர் ராஜன், பேர்ணாம் பட்டு ஆலியார்ஜுபேர் அகமது, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சரவணன், சி.ரவி, எஸ். தணிகாசலம், கே.கருணாகரன் ஆர்.முருகேசன், கே. சீதாராமன் என்.இ.சத்யானந்தம் பிரதீஷ், குமார பாண்டியன்,

பி.வெங்கடேசன், கே.ஜனார்த்தனன், கஜேந்திரன், அன்பரசன் முருகன், பேரூர் செயலாளர்கள் பி.எம்.ஜாகிர் உசேன், பெருமாள் ராஜா, கே.நேரு, அருள்நாதன் மாவட்ட இளைஞரணி அமைப்பாகே.ராஜ மார்த்தாண்டன், ச.பரிமளம் கே.ஆர்.அசோக், வாசுகி, எம்.மஞ்சுளா எம்.இ. கோவிந்தராஜ், பி.லோகநாதன் மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அமைப்பாளர் எம்.நூருல்லா, மாவட்ட அமைப்பாளர் தௌபீக் அகமது மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கடலூர் மேற்கு மாவட்டக் கழக மாணவர் அணி நகர, ஒன்றிய, பேரூர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புக்கு என்.எல்.சி. தொ.மு.ச. அலுவலகத்தில் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டது. கடலூர் மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சதீஷ்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் செல்வமணி வரவேற்றார். மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பிலோமின், சேதுபதி, சிவனேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு உறுப்பினர் படிவங்களை வழங்கினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம் நகரச் செயலாளர் க.தண்டபாணி, கடலூர் மேற்கு மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ராஜேஷ், தொ.மு.ச பொதுச் செயலாளர் என்.பாரி, பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.கார்த்திகேயன்,மாணவரணி துரை அரசன், விக்கி, சிலம்பரசன், கிருஷ்ணராஜ், நந்தா, இனியராஜ், வினோத், முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### இரா.ஆவுடையப்பன் -டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

## நெல்லை சேரன்மாதேவியில் கலைஞர் நூற்றாண்டு பொதுக் கூட்டம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சிறப்புரை!

நெல்லை.அக்.18.

நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி பேருந்து நிலையம் அருகில் திராவிட கழகம் சார்பில் குருகுலப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா, கழக முன்னோடி பத்தமடை ந.பரமசிவத்திற்கு பாராட்டு விழா, “தாய் வீட்டில் கலைஞர்” என்னும் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா தி.க. மாவட்ட தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.பி. எம்.மைதீன்கான், கழக முன்னோடி பத்தமடை பரமசிவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தி.க. மாவட்டச் செயலாளர் வேல்முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திராவிட கழக தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்வில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது:-

வரலாற்றை நாம் அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டிருந்தால்தான் எத்தகைய சோதனை எல்லாம் இந்த சமுதாயம் தாண்டி இருக்கிறது. எத்தகைய கீழ்மை நிலையில் இருந்த இந்த சமுதாயத்தை தந்தை பெரியார் தனது உழைப்பால்,தனது பேச்சால்,ஊர் ஊராக திரிந்து அவர் மாற்றியுள்ளார். என நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற கடமைப் பட்டுள்ளோம்.

குருகுலத்தில் ஏற்பட்டிருந்த சாதி வேறுபாடுகள், மனிதன் சாப்பிடும் உணவில் கூட இருந்த வேறுபாடு களை கண்டித்து எழுந்த முதல் குரல் தந்தை பெரியாரின் குரல். அந்த குரலுக்கு தான் இன்று நூற்றாண்டு காலம் ஆகி உள்ளது.அன்று எழுப்பிய குரல் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. என்றால் சாதிய வேறுபாடுகளை மறந்து சமத்துவமான நிலை உருவாக வேண்டும் என்பதற்காகத்தான், ஆகையால் தான் தலைவர் கலைஞர் அவர்கள் சமத்துவபுரத்தை உருவாக்கி அனைவரையும் ஓரிடத்தில் அமர செய்தார்.

இன்று முதலமைச்சர் அவர்கள் காலை சிற்றுண்டி திட்டத்தை தந்துள்ளார். சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பது தான் தந்தை பெரியாரின் கனவு. நாம் அனைவரும் தமிழர்கள், தமிழால் ஒன்றுபட்டுள்ளோம் என்று சொன்னால் அதற்கு காரணம் தந்தை பெரியார் தான்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசியதாவது:-

மகளிர்க்கு என ஏராளமான திட்டங்களை இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் மகளிர்களுக்கு மாதம் ரூபாய் 1000,ம் வழங்கப்பட்டு வருகிறது.தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கத்தை பின்பற்றியவர் கலைஞர் அவர்கள்.அந்த சுயமரியாதையை பெண்களுக்கு கொடுக்கும் இயக்கம் திராவிட இயக்கம் தான். எனவே தான் மகளிர்களுக்கு வழங்கப்படும் 1000,ம் ரூபாய் உதவித்தொகை,என பெயரிடாமல் உரிமைத்தொகை, என முதலமைச்சர் அவர்கள் பெயர் வைத்துள்ளார்கள்.

இன்னும் 6 மாதத்தில் பா.ஜ.க. ஆட்சி இருக்காது, இந்தியா கூட்டணியால் அவர்கள் தோல்வி அடைவது உறுதி. நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி அமோக வெற்றி பெறும்.

இந்தியாவை காப்பாற்றுவது இந்தியா கூட்டணி தான்.

இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசினார்.

முன்னதாக தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து தி.க. தலைவர் கி.வீரமணி எழுதிய “தாய் வீட்டில் கலைஞர்” என்னும் நூலை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் மா.கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலைராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு,

நாங்குநேரி மேற்கு ஒன்றியச் செயலாளர் சுடலைக்கண்ணு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, கோபால சமுத்திரம் பேரூராட்சித் தலைவர் தமயந்தி,சேரன்மகாதேவி நகரச் செயலாளர் மனிஷா செல்வராஜ்,

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் அன்வர் உசேன்,முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முருகன், வழக்கறிஞர் அரவிந்த், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முதுகுளத்தூர் பேரூராட்சியில் ரூ.242.85 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகத்துடன் கூடிய வாரச்சந்தை கட்டடத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திறந்து வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி தருமை கயிலைமேல்நிலைப் பள்ளியில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் உரையாற்றினார். மேடையில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், முதன்மைக்கல்வி அலுவலர் பாலுமுத்து, கோட்டாட்சியர் பால்துரைஆகியோர் உள்ளனர்.

### தேனி வடக்கு - தெற்கு மாவட்ட செயற்குழு மற்றும் -

# கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை

தேனி, அக்.18-

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. மற்றும் தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்ச்செல்வன், ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பெரியகுளம் வடக்கு ஒன்றியம் வடுகபட்டி பேரூராட்சியில் கலைஞர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (19.10.2023- வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில்; நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியும், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர். அதற்கு முன்பாக மாலை 4 மணி அளவில் தேனி என்.ஆர்.டி. மஹாலில் தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டங்களில் மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், இளைஞரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டுமென்று தேனி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழகம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:

1.மாநில இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேனி மாவட்ட வருகை குறித்து.

2.அக்டோபர், 25ஆம் தேதி தேனி மாவட்டம் கம்பம் நகரில் கம்பம்.நா. நடராஜன் நினைவு திருமண மண்டபத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழிகள் வழங்குதல் குறித்து.

3.கம்பம் மற்றும் தேனி நகரில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வாசக சாலை திறந்து வைத்தல் குறித்து.

4 தேனி நகரில் கம்பம் ரோட்டில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் நடைபெறுவது குறித்து.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தஞ்சை வேளாண் கல்லூரிக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு குடும்பத்தினர் நன்றி!

## மகத்தான அஞ்சலி என புதல்வி சவும்யா சுவாமிநாதன் பாராட்டு!

சென்னை, அக்.18-

தஞ்சை வேளாண் கல்லூரிக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் வைத்ததற்கும், அவர் பெயரில் வேளாண் மாணவர்களுக்கு விருதுகள் அறிவித்ததற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் குடும்பத்தார் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவரது புதல்வி சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தமது தந்தைக்கு தமிழ்நாடு அரசு மகத்தான அஞ்சலி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வேளாண் விஞ்ஞானி மறைந்த எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் மகள் டாக்டர் வி.சவும்யா சுவாமிநாதன் காணொலி யில் தெரிவித்துள்ளதாவது:

தஞ்சாவூர் ஈச்சங்கோட்டையில் உள்ள அரசினர் வேளாண் கல்லூரிக்கு எங்கள் தந்தை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் சூட்டப்படும் என்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் மரியாதைக்குரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு தீர்மானம் நிறைவேற்றி அறிவித்திருப்பதை அறிந்து எங்களது குடும்பத்தினர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

அது மட்டுமன்றி வேளாண் கல்லூரியில் தகுதி வாய்ந்த மாணவ ர்களுக்கு அவர் பெயரில் விருது வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்



பட்டிருப்பதும் எங்கள் குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தம் வாழ்நாள் முழுமைக்கும் வேளாண்துறையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எங்களது தந்தையாருக்கு தமிழ்நாடு அரசு அளித்துள்ள மகத்தான அஞ்சலி இது என்றே நான் கருதுகிறேன்.

இந்த நாட்டின் உணவு சத்துணவு, பாதுகாப்பு உள்ளிட்ட வேளாண் சம்பந்தப்பட்ட துறைகளில் அளப்பரிய பணிகள் ஆற்றியதுடன், அறிவியல் கல்வியில் அதிக நாட்டம் கொண்டு அதை முறைப்படி இளைய தலைமுறைக்கு வழங்குவதில் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

இந்தியாவில் உள்ளவர்கள் அறிவியல் துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தவர், தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடைமுறைகளை அரிய வாய்ப்பு பெற்றவராக இருப்பின் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

மிக உயரிய கொள்கைகளுடன் வாழ்ந்தவர்கள் பற்றிய வரலாறுகளை இளந்தலைமுறையினர் படித்துத் தெரிந்துகொள்ள அரசு மேற்கொண்டு வரும் செயல்கள் வெகுவாகப் பாராட்டுக்குரியதாகும்.

பல்வேறு சாதனைகளை புரிந்தவராக இருப்பினும், மறைந்த எங்கள் தந்தையார் மிகவும் அடக்கமானவர். சமுதாயத்தில் அதிர்ஷ்டமற்றவர்கள் எனப்படும் அடித்தட்டு மக்களிடம் இரக்கம் கொண்டவர் என்பதோடு அவர்கள் மீது எப்போதும் அனுதாபத்துடன் இருந்தவர்.

அவரது வாழ்க்கையில் அவர் செயல்படுத்திய சாதனைகள் மூலம் நாங்கள் பெருமை அடைகிறோம். எங்கள் குடும்பம் சார்பில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயர் தஞ்சை ஈச்சங்கோட்டையில் உள்ள வேளாண் கல்லூரிக்கு சூட்டப்பட்டுள்ளது மாணவர்களுக்கு பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது எங்களது தந்தை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் தலைசிறந்த அஞ்சலி யாகும்.

இவ்வாறு டாக்டர் சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

### சு.சுப்பிரமணியன் தலைமையில்

# நெல்லை மாநகர செயல்வீரர்கள் கூட்டம்!

## கழக முன்னணியினர் பங்கேற்றனர்

நெல்லை.அக்.18.

நெல்லை மாநகர கழக செயல் வீரர்கள் கூட்டம் நெல்லை டவுன் லட்சுமி மகாலில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில்

பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை(பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், நெல்லை மத்திய மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்ஃ மீரான்ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது. நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி வரவேற்புரையாற்றினார். தலைமை கழக பேச்சாளர் நெல்லை முத்தையா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

தீர்மானத்தை மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள் வாசித்தார்.

இந்நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் பங்கேற்று கருத்துக்களைக் கேட்டு ஆலோசனை வழங்கி பேசினார்.

நிகழ்வில் கழக தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், கழக மூத்த முன்னோடி குமாரசுப்பிர மணியன், மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன், துணை செயலாளர் சுரேஷ், மாநகர துணை செயலாளர் சுதா மூர்த்தி துணை மேயர் கே.ஆர்.ராஜ், மானூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன்

இளைஞர் அணி அலிப் மீரான், இனியன், செல்வம், அன்பழகன், ரவி, மாயா செந்தில், சார்பு அணி நிர்வாகிகள் சவுந்தரம், பத்மா, சித்திக், அவதார் ஷாஜகான், ரகுமான் ஷா, ஷெட்டி, பெரியார், வினோத், முத்து, பெப்சி சரவணன், தளபதி ஆறுமுகம், டைட்டஸ் கண்ணன், சுரேஷ்குமார், சாகிர் உசேன், ஸ்டார் அப்துல், சிவக்குமார், நர்மதா, பிந்து, ஆனிரேக்லண்ட், சுப்புலட்சுமி, ஷெர்லி, சக்திவேல், செல்வகணேஷ், கணேசன், வெங்கடேஷ், கோட்டூர் மீரான்,

எல்.ஐ.சி.பேச்சிமுத்து, மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேசன், ஜவகர், வட்ட செயலாளர்கள் சடாமுனி, சிந்து முருகன், மனோகர், பத்மராஜ், அகமதுரகுமத்துல்லா, ராஜ், கோட்டூர் செய்யது, பாப்புகுமார், மேகை செல்வம், பிரேம் கணேசன், ராஜன், புயல் மீனாட்சி, அருள், மாரிமுத்து, கேபிள் குமரேசன், தென்கரை முத்து, கிச்சு என்ற கிருஷ்ணன், ஆறுமுகம், கதிரேசன், சுப்ரீத், அருள் இளங்கோ, பேபி கோபால், ஜெயின் உசேன், ஆவின் கல்யாணி, பால மகேஷ், செல்வகுமார், கிங் பாலா, ஜாய் மரகதம், முறுக்கு சாகுல், தொப்பி காஜா, ராபர்ட் செல்லையா, அந்தோணி, ஜான் கென்னடி, பெர்க்மான் பாஸ்கர், இசக்கி, அகமது, பாதுஷா, மெடிக்கல் பாஸ்கர், ஆறுமுகம், ஆனந்த பெருமாள், சிவ ஐயப்பன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 23ஆம் தேதி முதல் அக்டோபர் மாதம் 8 ந் தேதி வரை சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு தொடரில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டு வீரர்களுக்கு ரூபாய் 9.40 கோடி ஊக்கத்தொகை வழங்கி பாராட்டியதற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாட்டு இளைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தி விளையாட்டு துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி வரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்ச உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 14ஆம் தேதி ஒட்டு மொத்த இந்தியாவே வியக்கும் வகையில் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் அகில இந்திய பெண் தலைவர்களை விருந்தினராக அழைத்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் மகளிர் உரிமை மாநாடு நடத்திய, கழக துணை பொது செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன் அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பது என்றும்.

சிறுபான்மை மக்கள் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்கள் ஆகியோரின் கோரிக்கையின் படி தண்டனைக் காலம் முடிந்த பிறகும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் இஸ்லாமிய சிறை கைதிகளை சட்டப்படி விடுதலை செய்வதற்கு ஆளுநருக்கு பரிந்துரை செய்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

லட்சக்கணக்கான சிறு, குறு வணிகர்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் விதமாக சமாதான திட்டத்தின் மூலம் ரூபாய் 50,000 த்துக்கும் குறைவாக வரி, வட்டி, அபராத தொகை செலுத்த வேண்டிய வணிகர்களுக்கான நிலுவைத் தொகையை முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.என சட்டமன்றத்தில் அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என்றும்.

வருகிற 27102023 வெள்ளியன்று நெல்லையில் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி மற்றும் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சீரும் சிறப்புமாக நடத்துவது என்றும்.

2006 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் முதலமைச்சர் அவர்களின் தலைமை நடைபெற்ற கழக இளைஞரணி முதல் மாநாடு கழகத்தின் திருப்புமுனையாக அமைந்தது. அதேபோல் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வரும் டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படி 40 ம் நமதே நாடும் நமதே என்பதை நிறைவேற்ற திருநெல்வேலி நாடாளுமன்ற தொகுதியில் கழகத் தலைவர் அவர்களால் அடையாளம் காட்டப்படும் வெற்றி வேட்பாளரை தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெறசெய்ய இரவு, பகல் பாராது உழைக்க வேண்டும் என்றும்.

வருகின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொது தேர்தலுக்கு தயாராகும் வகையில் கழகத் தலைவர் அவர்களின் உத்தரையின்படி வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் நீக்கல் மற்றும் திருத்தல் பணிக்காக வரும் நவம்பர் மாதம் 04.11.2023, 05.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கும் சிறப்பு முகாமில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வாக்காளர் பட்டியலில் தவறாமல் இடம்பெறச் செய்ய வேண்டும் என்றும்

தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூராட்சி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் கோவை நாச்சிமுத்து, ஒன்றிய செயலாளர் சுப்பையா வடமதுரை பேரூர் செயலாளர் கணேசன், அரியலூர் பேரூர் செயலாளர் கருப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளம் பகுதிகளில் ஆய்வு!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் மேற்கொண்டார்!

குமரி, அக்.18-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 14வது வார்டுக்கு உட்பட்ட வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளத்தில் நேற்று (17.10.2023, செவ்வாய்கிழமை) காலை 7 மணி முதல் 9 மணி வரை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

அண்மையில் சுப்பையார்குளத்தை ரூ.47 லட்சம் செலவில் தூர்வாரப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. சுப்பையார் குளத்தில் அப்பகுதியில் உள்ள கழிவு நீரோடை யிலிருந்து கழிவு நீர் கசிந்து குளத்திற்குள் வருவது தெரியவந்தது. அதை சீரமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக மாநகராட்சி மேயர் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு உடனடியாக அதனை சீரமைத்து, கழிவு நீரோடையை சுத்தம் செய்து அப்பகுதியில் கழிவு நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளவும் அறிவுறுத்தினார். நாகர்கோவில், வடசேரி, கிருஷ்ணன்கோவிலில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கால்வாய் வழியாக வரும் நீரில், கழிவுநீர் கலந்து வருவதால், அந்த தண்ணீர் சுப்பையார் குளத்திற்கு வராமல் தடுக்கப்பட்டுள்ளது. தற்போது குழாய் மூலம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து சுப்பையார் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பணிக்காக ரூ. 23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குளத்தைச் சுற்றி நடைபாதைகள் அமைக்கவும், மேலும் குளத்தின் சட்டரை சீரமைக்கவும் நடவடிக்கை அருந்ததியர் காலனி பகுதியில் உள்ள கழிவுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளியேற்றுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஆய்வில் மாநகராட்சி பொறியாளர் பாலசுப்பிரமணியன், மாநகர நல அலுவலர் டாக்டர். ராம் குமார், நகரமைப்பு ஆய்வாளர் சந்தோஷ், சுகாதார ஆய்வாளர் மாதவன்பிள்ளை, மண்டல தலைவர் ஜவகர், மாமன்ற உறுப்பினர் திருமதி. கலா ராணி உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில்

# வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம்!

திண்டுக்கல், அக்.18-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வடமதுரை பேரூர் கழகத்தின் சார்பில் வாக்குச்சாவடி குழு உறுப்பினர் ஆலோசனைக் கூட்டம் வடமதுரையில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தேர்வு செயலாளர் கணேசன் தலைமை வகித்தார்.

அய்யலூர் மற்றும் வடமதுரை வேல்வார்கோட்டை காணப்பாடி சிங்காரக்கோட்டை வேலாயுதம்பாளையம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி பாகநிலை முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் குறித்த பயிற்சிகள் மற்றும் தேர்தலை எதிர்கொள்ளும் முறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வடமதுரை ஒன்றிய கழக செயலாளர் சுப்பையன், தொகுதி பொறுப்பாளர் கோவை நாச்சிமுத்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

வடமதுரை பேரூராட்சி தலைவர் நிருபா ராணி கணேசன், அய்யலூர் பேரூர் கழகச் செயலாளர் கருப்பன் மற்றும் மாணவரணி செயலாளர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள் ஒன்றிய, பேரூர், நகர கிளைச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நாகர்கோவில் மாநகராட்சி, வடசேரி, கிருஷ்ணன்கோவில், சுப்பையார் குளத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கள ஆய்வு மேற்கொண்டார்.



நெல்லை மாவட்டம் சேரன்மாதேவி பேருந்து நிலையம் அருகில் திராவிடர் கழகம் சார்பில் குருகுலப் போராட்டத்தின் நூற்றாண்டு விழா,பத்தமடை கழக முன்னோடி பரமசிவத்திற்கு பாராட்டு விழா, “தாய் வீட்டில் கலைஞர்” என்னும் நூல் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் விழா தி.க.மாவட்ட தலைவர் ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பங்கேற்றார். இந்நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி எழுதிய நூலை, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் மாநில வர்த்தக அணி இணை அமைப்பாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், கழக முன்னோடி பத்தமடை பரமசிவம்,ஒன்றிய செயலாளர் முத்துப்பாண்டி என்ற பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி உள்பட பலர் உள்ளனர்.

### தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களின் போது முன்னேற்பாடாக

# நியாயவிலை கடைகளில் இருப்பு வைத்திருக்க வேண்டும்!

## திட்டப்பணிகள் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!



நாமக்கல், அக். 18 - நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட ரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங் கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமையில், வனத்துறை அமைச்சர் மருத்துவர்மா.மதிவேந்தன் முன்னிலையில் பொது விநி யோக திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய் வுக் கூட்டம் நடைபெற் றது.

இக்கூட்டத்தில் நாமக் கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்க ளவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்கு மார், நாமக்கல் பாராளு மன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம் சேந்தமங் கலம் கு.பொன்னுசாமி, நக ரமைப்பு மண்டல திட்டக் குழு உறுப்பினரும், நாமக் கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான எஸ்.எம்.மதுரா செந்தில், உணவுப்பொருள் வழங் கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன் மைச் செயலாளர் / ஆணை யர் மருத்துவர் ஹர் சஹாய் மீனா, மேலாண்மை இயக் குநர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் எ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்து வர் ச.உமா, குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு காவல் துறை தலைவர் ஜோசி நிர் மல் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதா வது:

தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவு டன், நியாய விலைக் கடை களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் தரமானதாக வும், சரியான அளவிலும் வழங்கப்பட வேண்டும். அதே போன்று நியாய விலைக் கடைகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று வடிவமைத்து ஆலோசனை களை வழங்கி உள்ளார்.

அதன் அடிப்படையில் நியாய விலைக் கடை கட் டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திறந்த வெளி நெல் கொள்முதல் நிலை யங்களில் மழைக் காலங்க ளில் நெல் சேதமடைவதை தடுக்கும் பொருட்டு தமிழ் நாடு முதலமைச்சர் உடன டியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தி னார். மேலும், ரூ.238 கோடி மதிப்பீட்டில் 2,86,450 மெ.டன் கொள்ள ளவில் 10 மாவட்டத்தில் 20 இடங்களில் 211 சேமிப்பு கிடங்குகளை கட் டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் டெல்டா மாவட்டங்க ளான தஞ்சாவூர், கடலூர், திருவாரூர் டெல்டா அல் லாத காஞ்சிபுரம், செங்கல் பட்டு, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் 1.20 இலட்சம் மெ.டன் கொள் ளளவு கொண்ட சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு ரூ.100 கோடி நிதி ஒப்ப ளிப்பு செய்து அனுமதி அளித்துள்ளார்கள். விரை வில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளது.

இவ்வறாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 4 இலட்சம் மெ.டன் நெல் சேமித்து வைக்க நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. அரசின் இந்த நடவடிக்கையின் காரண மாக திறந்த வெளி நெல் கொள்முதல் நிலை யங் களே தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற இரண் டரை ஆண்டு காலத்தில் 16 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட் டுள்ளது.

நியாய விலைக் கடைக ளில் பயோ மெட்ரிக் நடை முறை மூலம் பொருட்கள் வழங்கும் திட்டம் மேம்ப டுத்தப்பட்டு, கண் கருவிழி சரிபார்ப்பு முறையில் பதிவு செய்து பொருட்கள் வழங் கும் வகையில் தமிழ்நாட் டில் உள்ள 36,000 நியாய விலைக்கடைகளிலும் இத் திட்டதைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. அதே போன்று முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டு வருபவர் கள் நியாய விலைக் கடைக ளுக்கு நேரில் சென்று பொருட்கள் வாங்க முடி யாத நிலையில் அவர்களின் பரிந்துரை கடிதத்தின் அடிப்படையில் அவர்க ளுக்கான பொருட்கள் பெற்றுக் கொள்ள நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாட்டில் 3.50 இலட் சம் நபர்கள் பயன் பெற் றுள்ளனர். நாமக்கல் மாவட்டத்தில் 13,167 நபர் கள் பயன் பெற்றுள்ளனர்.

நகரப் பகுதிகளில் 1000 குடும்ப அட்டைகள், கிராம பகுதிகளில் 800 குடும்ப அட்டைகள் உள்ள நியாய விலைக் கடைகள் பிரிக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு 1500 நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஆண் டுக்கு 500 கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் 1500 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, நியாய விலைக் கடைகளில் சாய்வு தளம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வச திகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

ஒன்றிய உணவுத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநில உண வுத்துறை மாநாட்டில் தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளை சிறப் பாக வடிவமைத்து கட் டப்படுவதற்கு ஒன்றிய உணவுத் துறை அமைச்சர் பாராட்டுகளை தெரிவித்த தோடு, அனைத்து மாநிலங் களும் இதே போன்று கட் டப்பட வேண்டுமென அறிவுறுத்தினார்கள்.

இணையதளம் வாயி லாக நகல் குடும்ப அட்டை பெறுவதற்கும் நடவ டிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. கடந்த ஆட்சி காலத்தில் 376 அரவை நிலையங்கள் மட் டுமே இருந்த நிலையில் தற்போது 700 அரவை நிலையங்களாக விரிவு படுத்தப்பட்டுள்ளன. மாதந்தோறும் 12 லட்ச மாக அரவை திறன் அதிக ரிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு கருப்பு, பழுப்பு அரிசிகள் இல்லாத வகையில் அரிசி வழங்கும் வகையில் அனைத்து அரவை நிலையங்களிலும் இயந்திரம் பொருத்தப் பட்டு கருப்பு, பழுப்பு இல் லாத அரிசி வழங்கப்பட்டு வருகிறது. தரமான உண வுப் பொருட்களை இறக்கு மதி செய்வதற்கு மாவட்ட வழங்கல் அலுவலர் தலை மையில் குழு அமைக்கப் பட்டுள்ளது.

தீபாவளி பொங்கல் போன்ற விழாக்களின் போது அனைத்து நியாய விலை கடைகளில் முன் னேற்பாடாக அனைத்து பொருட்களும் இருப்பு வைத்துக் கொள்ள வேண் டும் என அறிவுறுத்தப்பட் டுள்ளது. அனைத்து நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டினை கண்கா ணிக்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலை வர், மாவட்ட வருவாய் அலுவலர், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர், மாவட்ட வழங்கல் அலுவ லர், துணைப் பதிவாளர், வட்ட வழங்க அலுவலர் ஆகியோரை தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள அறி வுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பொதுமக் களுக்கு தரமான பொருட் கள் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் இதுபோன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவ்வாறு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் குடிமை பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு காவல் கண்காணிப்பாளர் பாலாஜி, மாவட்ட வரு வாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சிவக்குமார், இணைபதிவாளர் (கூட்டு றவு சங்கங்கள்) த.செல்வகு மரன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாது காப்பு அலுவலர் முத்து ரா மலிங்கம், தமிழ்நாடு நுகர்பொருள் கழக மண் டல மேலாளர் விஜய செல் வராணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, அக். 18 - பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்க ளின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

**பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் மகிழ்ச்சியுடனும் நல்ல ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் பொது விநியோக திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம் சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் / ஆணையர் மருத்துவர் ஹர் சஹாய் மீனா, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எ.அண்ணாதுரை , மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க போராட்ட நாடகங்கள் ஊரை ஏமாற்றவா?

தமிழகத்திற்கு காவிரி நீரைப் பெற்றுத்தர வக்கற்ற இந்தியாவை ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசை நடத்திவரும் சர்வாதிகாரப் போக்கைக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தாமல் பா.ஜ.க.வின் சார்பாக கழக அரசைக் கண்டித்து கும்பகோணத்தில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சுடாத துப்பாக்கியை வைத்துக் கொண்டு சுட்டுவிடுவேன், சுட்டு விடுவேன் என்று அ.தி.மு.க. வினரை மிரட்டுவதைப் போல் தி.மு.க. அரசை மிரட்டப் பார்க்கிறார் அரசியல் சாதுர்யமில்லாத அண்ணாமலை.

தமிழ்நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொண்டார். அவரது நடைபயணத்தைப் பற்றி பா.ஜ.க.வைச் சேர்ந்த சிலரே இது நடைபயணம் அல்ல கேரவன் பயணம் என்றனர். அன்றைக்கு பா.ஜ.க.விற்கு தோழமையாக இருந்த கட்சியினரோ ஒரு நாளைக்கு ஒன்றரை அல்லது இரண்டு கி.மீ.தான் நடக்கிறார் மற்ற நேரமெல்லாம் வாகனப் பயணம் தான் என்று அவரது நடைபயணத்தைப் பற்றி நாவாடல் புரிந்தனர். பத்திரிக்கைகள் பலவும் அப்படியே படம் பிடித்துக் காட்டினர். தி.மு.க வினர் யாரும் அவரைப் பொருட்படுத்தவே இல்லை. கழகப் பத்திரிக்கையிலும் அவரது நடைபயணத்தைப் பற்றி விமர்சித்து எழுதவில்லை.

வர இருக்கின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல் தி.மு.க விற்கும் பா.ஜ.க.விற்கும் தான் என்று ஜோக் அடித்து சிறு பிள்ளைகளின் கண்ணாமூச்சி விளையாட்டையெல்லாம் நடத்தினார். இதைக் கேட்டு அ.தி.மு.க.வினர் அண்ணாமலையின் அறிவாற்றலைப் பற்றி அங்கலாய்த்தது அரங்கேறிய தனிக்கதை.

நடைபயணம் மேற்கொண்ட அரசியல் வாதிகளெல்லாம் கால்கள் புண்ணாகி இரத்தம் ஒழுக ஒழுக அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் நடக்க வேண்டாம் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்ட போதும் மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரை நீதி கேட்டு நெடும் பயணம் மேற்கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் ஆக முடியாது?

1938ல் திருச்சியிலிருந்து இந்தித் திணிப்பை எதிர்த்து ஆவேசமாக இராமமிர்தம் அம்மையார் உட்பட பல பெண்களோடு சென்னை வரை முழக்கமிட்டு ஆங்காங்கே அனல்கக்கும் பேச்சால் மக்களிடையே இந்தி எதிர்ப்பு உணர்வை தூண்டி விட்டுக் கொண்டே வந்தாரே பட்டுக்கோட்டை அஞ்சா செஞ்சன், அக்னி வார்த்தைகளின் பிறப்பிடம் அழகிரிசாமி ஆகிடவும் முடியாது.

ஒற்றுமை யாத்திரை என்று இந்தியாவின் குமரி முனையில் கழகத் தலைவர் மோடி ஆட்சிக்கு முடிவுரை எழுதப் போகும் இந்தியா கூட்டணிக்கு வித்திட்ட தளபதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு காஷ்மீரில் முடித்த ராகுல் காந்தியும் ஆகி விட முடியாது.

இப்போது உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்களாம்! அதுவும் தி.மு.க அரசை கண்டித்தாம்! என்னே வேடிக்கை! படுத்திருக்கும் சிங்கத்தின் வாலை லேசாக தொட்டு விட்டு சுண்டெலி சொன்னதாம் சிங்கத்தையே வீழ்த்தி விட்டேன் என்று. அதைப்போல கால் ஊன்ற இடமில்லை, காலுக்கும் ஊன்றி நிற்க போதுமான வலுவில்லை தமிழ்நாட்டில், இந்த நிலையில் இருக்கிற பா.ஜ.க. என்கிற சுண்டெலி ஏதோ கத்தி விட்டு போகட்டும் என்று கண்டு கொள்ளாமல் விட்டால் தி.மு.க என்ற சிங்கத்தை சீண்டிப் பார்க்கப் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்.

**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்



காவிரி மேலாண்மை ஆணையம் தமிழகத்திற்கு கேட்ட தண்ணீர் 16000 கன அடியைக் கூட அல்ல ஆணையிட்ட வெறும் 3000 கன அடி தண்ணீரைக்கூட கர்நாடக அரசு தமிழகத்திற்குத் தரக்கூடாது என்று போராட்டம் நடத்துவது யார் பா.ஜ.க.வினர் தானே! ஒன்றிய அமைச்சராக இருக்கிற ராஜீவ் சந்திர சேகர் என்பவர் தமிழகத்திற்கு தண்ணீர் தரக் கூடாது என்று கூறுகிறாரே அவர் யார் பா.ஜ.க.காரர் தானே?

பசுவராஜ் பொம்மை மற்றும் எடியூரப்பா என்ற இரண்டு முன்னாள் கர்நாடக முதல்வர்களும் தமிழகத்தின் எல்லை வரை வந்து தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தரக்கூடாது என்று கர்நாடக அரசை காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை நிறைவேற்றக் கூடாதென்று மக்களையும் அல்ல! அல்ல! தங்களது பா.ஜ.க. தொண்டர்களை தூண்டி விட்டு பந்த் இருமுறை நடத்த வைத்தனரே, அந்த இரண்டு முன்னாள் முதல்வர்களும் யார்? பா.ஜ.க. வினர் தானே!

கர்நாடக காங்கிரஸ் அரசு காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி தந்த தண்ணீரை தடுத்திடும் அளவிற்கு போராட்டத்தின் மூலம் நெருக்கடியை தந்து கொண்டிருப்பவர்கள் யார்? பா.ஜ.க. தலைவர்களும், கட்சியினரும் தானே!

கர்நாடகத்தில் காவல்துறை அதிகாரியாக இருந்து அந்த மாநில உணர்வோடு இருக்கும் அண்ணாமலையே எதற்கப்பா உண்ணாவிரதம்? முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி கர்நாடகத்தில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று போராடுகிற பா.ஜ.க. வினரை போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். அது என்ன இந்திய பிரதமர் என்று எழுதாமல் உங்கள் பிரதமர் மோடி என்று எழுதியுள்ளோம் என்று கேட்கத் தோன்றுகிறதா?

ஆம்! மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவரே தமிழகத்திற்கு தண்ணீர் தரக்கூடாது என்று சொன்னால் தமிழ்நாடு இந்தியாவின் அங்கம் இல்லையா? தமிழ் நாடு என்ன தனிநாடாகவா இருக்கிறது? அந்த ஒன்றிய அமைச்சரை ஏன் உங்கள் பிரதமர் மோடி இதுவரை கண்டிக்கவில்லை. அப்படி அந்த அமைச்சர் பேசியதை ஊக்குவிக்கிற பிரதமர் உங்கள் பிரதமராகத்தான் இருக்க முடியும். இந்தியா ஒருமைப்பாட்டை விரும்பும் எங்களால் எப்படி அவரை இந்தியப் பிரதமர் என்று அழைக்க முடியும்? மணிப்பூரைப் போல் தமிழகத்தைப் பார்க்க விரும்புபவர் என்றைக்கும் எங்கள் பிரதமராக ஆக முடியாது.

பிரதமராக மன்மோகன் சிங் இருக்கும் போது இதே போன்ற பிரச்சினை, கர்நாடகம் தண்ணீர் தர மறுத்த போது உடனே தலையிட்டு விநாடிக்கு 9000 கன அடி தர வேண்டும் என்று கர்நாடகத்திற்கு உத்தரவிட்டதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உங்கள் பிரதமர் மோடி ஏன் அவ்வாறு செய்யவில்லை? தமிழ்நாட்டில் விளையும் நெல் இந்தியாவிற்கே பயன்படும் என்ற போது அந்தப் பயிர்கள் கருகிட பிரதமர் மோடி நாட்டு மக்கள் மீது அக்கறை இருந்தால் இந்நேரம் தமிழகத்திற்கு தண்ணீர் தர உத்தரவிட்டிருக்க முடியும்!

ஐ.பி.எஸ். படித்த அண்ணாமலையே முதலில் உங்கள் பிரதமர் மோடியிடம் கூறி போராடும் பா.ஜ.க.வின் மனித நேயமில்லாத மரத்துப் போனவர்களிடம் போராடாமல் நிறுத்தச் சொல்லுங்கள். பிறகு உங்கள் உண்ணாவிரத நாடகத்தை உங்கள் அரசியல் இருப்பைக் காட்டிக் கொள்ள அரங்கேற்றம் செய்யுங்கள்.

தமிழ்நாட்டிற்கு தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டு மென்று விருதுநகர் நகரத்தில் உண்ணாவிரதம் இருக்காமல் விருதுநகர் நகரம் தாண்டித் தள்ளி தான் இருந்தார். பிறகு அவரை விருதுநகரில் உண்ணாவிரதம் இருக்க வைத்தனர். அறிஞர் அண்ணா போராடி தடுக்கப் பார்த்தார்., முடியவில்லை, ஜீவா தடுக்கப் பார்த்தார் முடியவில்லை. 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டாரே! எதற்காக? இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கத்தான்! அப்படி உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்ட தியாகி சங்கரலிங்கனார் ஆகிவிட முடியாது?

அண்ணாமலையே நீங்கள் அவசரத்தில் வார்த்தைகளை அள்ளிவீசும் அரசியலில் ஒரு எல்.கே.ஜி. மாணவர். சில நாட்களுக்கு முன்பு எங்கள் சகோதரர் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியால் டி.என்.பி.எஸ்.சி தேர்வில் குரூப் 4 தேர்வு எழுதி வெற்றி பெற முடியுமா என்றீர்களே! ஞாபகம் இருக்கிறதா?

யு.பி.எஸ்.சி மற்றும் டி.என்.பி.எஸ்.சி யைப் பற்றி அடிக்கடிப் பேசும் அண்ணாமலையே 44 வயதில் ஒருவர் குரூப் 4 தேர்வு எழுத முடியுமா? அதற்கு அனுமதி உண்டா? எல்லாம் தெரிந்தவரே உங்களால் இந்த வயதில் தேர்வு எழுத வைக்க முடியமா என்று மோடியிடம் கேட்டுச் சொல்லுங்கள். அந்த வயதில் தேர்வு எழுத முடியாது என்பதைக் கூட அறியாமல் உமக்கெல்லாம் எதற்கு சவால்? அப்படி எழுதிட அனுமதி வாங்கித் தந்தால் எங்கள் சகோதரரை தேர்வு எழுத வைப்பதைப் பற்றி நாங்களும் பரிசீலிக்கிறோம்.

தன்மானம் தான் எனக்கு முக்கியம்? அதைவிட்டு விட இந்த அண்ணாமலை என்றைக்கும் தயாரில்லை என்று ஆவேசமாக பேசினீரே! உங்களோடு உறவை முறித்துக் கொண்டோம் என்று கூறிய பிறகு அ.தி.மு.க. தலைவர்கள் உங்களை அரசியல் அறிவற்றவர் என்றார்களே அதற்கு பதில் எங்கே? எங்கே போனது உங்கள் தன் மானம்? பத்திரிக்கையாளர்கள் கேட்டால் பதில் சொல்லாமல் மேலிடம் பதில்தரும் என்று பம்முகிறீர்களே ஏன்? இதற்கு பெயரென்ன வீரமா?

உங்கள் தன்மானம் தளர்ந்து போய்விட்டதா? சுய மரியாதை சுருண்டு போய் விட்டதா? துப்பாக்கியில் தோட்டா இல்லையா? அல்லது துப்பாக்கியைத் தூக்க முடியாத அளவிற்கு உங்கள் மேலிடத்தால் காயம் பட்டு விட்டீர்களா? அ.தி.மு.க., பா.ஜ.க. உறவு முறிவு நாடகம் என்று மக்கள் பேசிக் கொள்வதில் உண்மையிருக்குமோ?

எடப்பாடியார் தி.மு.க அரசை மட்டும் தொடர்ந்து பேசுகிறார். 9 ஆண்டு கால பா.ஜ.க. அரசைப் பற்றி ஒரு வார்த்தை இன்றைய தேதி வரை பேசவில்லையே! நீங்களும் ஒன்றும் பேசாமல் மேலிடம் பதில் தரும் என்கிறீர்களே! இதற்கு பெயர் அரிதாரம் போடாத நாடகமா? அசல் உறவு முறிவா? முதலில் அண்ணாமலையே இதற்குப் பதில் சொல்லிவிட்டு பிறகு தி.மு.க அரசை எதிர்த்துப் புது காரணம் ஏதாவது கிடைக்கிறதா என்று தேடிப் பார்த்து விட்டு போராட தயாராகுங்கள்.

ஆமாம், ஒன்றிய அரசை தண்ணீர் தர வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்த போது எதிர்க்கட்சி மற்றும் தோழமைக் கட்சிகளெல்லாம் ஒரே மனதோடு தமிழ்நாடு அரசின் காவிரிக்கான தீர்மானத்தை ஆதரித்துப் பேச உங்கள் பா.ஜ.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வானதி வெளிநடப்பு செய்தது ஏன்? இது நியாயமா? பா.ஜ.க. நோக்கமெல்லாம் கன்னடர்களும் தமிழர்களும் எப்படியாவது மோதிக் கொள்ள வேண்டும். அதை வைத்து அரசியல் செய்து கர்நாடகத்தில் சில எம்.பி. சீட்களையாவது வெல்ல வேண்டும் என்பதுதான்.

எனவே அண்ணாமலையே! உங்கள் போராட்டத்தால் ஒன்றும் நிகழப் போவதில்லை! உடனே கர்நாடகத்தில் தண்ணீர் தரக் கூடாது என்று போராடும் உங்கள் பா.ஜ.க. கட்சித் தலைவர்களை, தொண்டர்களை போராடாமல் இருக்க சொல்லி உத்தரவிட உங்கள் பிரதமர் மோடியிடம் கூறுங்கள்! உங்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருக்கிறது பிறகு கேட்கிறோம்.




நெல்லை மாநகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் டவுன் லெட்சுமி மகாலில் வைத்து மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் பங்கேற்று கருத்துக்களை வழங்கி பேசினார். உடன் பூ.சுப்பிரமணியன், சுப. சீதாராமன், முருகன், சுரேஷ்,துணை மேயர் ராஜ்,பொன்னையா பாண்டியன், குமார சுப்பிரமணியன், பெருமாள், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, அப்துல் கையூம், சுதாமூர்த்தி, மாரியப்பன், பத்மா, சௌந்தரம் உள்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.10.2023) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் சந்தித்தபோது, புதுதில்லியில் அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மாநாட்டினை சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்தியமைக்காக முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். உடன் வழக்கறிஞர்கள் ரிச்சர்ட்சன் வில்சன், ஜி.தினேஷ் ஆகியோர் உள்ளனர்.

### இந்தியாவையே திரும்பிப்பார்க்க வைத்த மகளிர் உரிமை மாநாட்டை

# தலைமையேற்று சிறப்புற நடத்தி கொடுத்த முதல்வருக்கு நன்றி!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் பா.ராணி அறிக்கை!

சென்னை, அக். 18 - கழக மகளிர் அணிச் செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

" இந்தியாவை திரும்பி பார்க்க வைத்த தி.மு.கழக மகளிர் உரிமை மாநாடு. ”பெண்களின் முன்னேற்றமே சமுதாய மு ன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள்.அவரது நூற்றாண்டை முன்னிட்டு தி .மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில் மகளிர் உரிமை மாநாட்டினை தலைமை தாங்கி சிறப்புற நடத்தி கொடுத்த தி.மு கழகத்தின் தலைவர், தமிழநாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும்

இண்டியா கூட்டணியின் பெண் தலைவர்களை ஒருங்கே இணைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டினை வெற்றி மாநாடாக முன்னின்று செய்த கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.,

கழக பொதுச் செயலாளர் அமைச்சர் துரை முருகன் விழாவினில் பங்கேற்று சிறப்பித்த இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் கழகத்தின் துணை பொது செயலாளர்கள் விழாவினில் பங்கேற்பு செய்து சிறப்பித்த அமைச்சர் பெருமக்களுக்கும் மகளிர் மாநாட்டு நிகழ்ச்சியினை முன்னின்று செய்து சிறப்பானதொரு முறையில் விழா ஏற்பாட்டினை செய்து கொடுத்த அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் , அமைச்சர் தா. மோ. அன்பரசன் ஆகியோரும் தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்ட கழக செயலாளர்களுக்கும், பாராளுமன்ற, சட்டமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்களுக்கும் கழகத்தின் சார்பணி நிர்வாகிகளுக்கும் , 2024 பாராளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் வகையில் வெற்றி மாநாடாக்கிய சிறப்பாக செயல்பட்ட கழக தூண்களாம் மகளிரணியின் அன்புச்சகோதரிகள் அனைவருக்கும் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதி கழக நிர்வாகிகள் அனைவருக்கும் மற்றும் ஏனைய கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவருக்கும் கழகத்தின் மாநில மகளிரணி மற்றும் மாநில மகளிர் தொண்டரணியின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தலைமை

# நாமக்கல் கிழக்கு, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், அக். 18 - கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வழிகாட்டுதல் படி தமிழ்நாடு முழுவதும் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக நாமக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் நளா ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பொன். சித்தார்த் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய இராஜேஸ்குமார் எம்.பி, நாமக்கல் மாவட்டம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப அணியினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசின் சாதனைகளையும், திமுகவின் கொள்கைகளையும் மக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். திராவிட மாடல் ஆட்சியின் வருங்கால சந்ததியினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் வெற்றிக்காக பாடுபட வேண்டும். திமுகவின் கொள்கைகளையும் திராவிட நாடு ஆட்சியில் சாதனைகளையும் அவ்வப்போது இணையதளத்தில் பதிவிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தகவல் தொழில் நுட்ப அணி என்பது கழகத்தின் செயல்பாடுகளை மட்டும் இணையதளத்தில் பதிவிடுவதை மட்டுமல்லாமல், தற்பொழுது தாய்க் கழகத்தையே மிஞ்சுகின்ற வகையில் இந்த அணியின் செயல்பாடுகள் இருந்து வருகிறது. தமிழகத்தில் அதிக அளவில் தொழில்நுட்ப பூங்கா வருவதற்கு காரணமாக இருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தொலைநோக்குப் பார்வையோடு கொண்டு வந்த திட்டம் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்னும் பன்மடங்கு பன்மடங்கு மெருகேற்றி செயலாற்றி வருகிறார். மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர்களில் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பிக்காதவர்களை கண்டறிந்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு வழி காட்ட வேண்டும். இந்த அணியில் உள்ளவர்கள் தங்களது பகுதியில் இ-சேவை மையம் தொடங்க எண்ணினால் அதற்கு மாவட்ட கழகம் உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கும். கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் விடுபட்டவர்களை பதிவு செய்யும் பணியில் சிறப்பாக செயல்பட்ட தகவல் தொழில் நுட்ப அணியினரை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் பேசும்போது, வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் ஆகியவற்றை முன்னெடுப்பாக நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும். தி.மு.க.வின் கொள்கைகளை விளக்கி, எதிர்கால சந்ததியினருக்கு திராவிட மாநில ஆட்சியின் சாதனைகள் மற்றும் கொள்கைகளை இளைஞர்களுக்கு எடுத்துரைத்து, திராவிட மாடல் ஆட்சி குறித்து விழிப் புணர்வு கொண்டு வர வேண்டும். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திமுக தொண்டர்களை பார்த்து சோல்ஜர்ஸ் என்று கூறினார். அது போல தகவல் தொழில்நுட்ப அணியினர் அனைவரும் ஐடி சோல்ஜர்ஸ் என் றார். அணியினர் அனைவரும் மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் அவரது வழிகாட்டுதலுடன் செயல்பட வேண்டும் என்றார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பொன். சித்தார்த், மாவட்டப் பொறியியல் அணி அமைப்பாளர் ப.கிருபாகரன், தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் சர்தார் ஜான், சரவணன், பூபதி, சுதா ஜெயக்குமார்,, தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் வேலூரில் நடந்தது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மலர்விழி லோகநாதன், ஜி.எஸ்.அரசு, எஸ்.பாண்டியன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு ஆகியோர் உள்ளனர்.

# இந்தியப் பெண்களின் உரிமைக் குரலான ‘திராவிட மாடல்!’

அண்ணா.. ஸ்டாலின் அண்ணா” என்று நெஞ்சம் கொஞ்சும் மழலைத் தமிழிலும், “அக்கா...கனிமொழி அக்கா” என்று இதயம் குளிரும் குழந்தைத் தமிழிலும் இந்திய அரசியலின் முன்னணி பெண் தலைவர்கள் ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக அழைத்த நிகழ்வு சென்னையை மட்டுமல்ல, இந்தியா முழுமையையும் கவனிக்கச் செய்திருக்கிறது.

தி.மு.க. மகளிரணியின் சார்பில் அக்டோபர் 14 அன்று சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடத்தப்பட்ட மகளிர் உரிமை மாநாட்டில் சோனியா காந்தி அம்மையார் தொடங்கி அத்தனை பெண் தலைவர்களும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாட்டின் அளப்பரிய பங்களிப்பை எடுத்துரைத்தனர்.



கோவி.லெனின்
பத்திரிகையாளர்

ஜம்முகாஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முஃப்தி முதல் கேரளாவை சொந்த மாநிலமாகக் கொண்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா வரை, இந்தியாவின் வடக்கு எல்லை முதல் தெற்கு எல்லை வரையிலான பல மாநிலங்களைச் சேர்ந்த பெண் ஆளுமைகளும் மகளிர் உரிமை காப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வதை ஒவ்வொரு திட்டத்தின் வாயிலாகவும் எடுத்துக் காட்டினர்.

1989ஆம் ஆண்டிலேயே கலைஞர் ஆட்சியில் வழங்கப்பட்ட குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சமபங்கு, வேலைவாய்ப்புகளில் மகளிருக்கு 30% இடஒதுக்கீடு, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேறு உதவித் திட்டம் எனப் பலவற்றையும் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே, சமாஜ்வாடி கட்சியின் டிம்பிள் யாதவ் எம்.பி, ஆம் ஆத்மி கட்சியின் ராக்கி பிட்லன், திரிணாமூல் காங்கிரசின் சுஷ்மிதா தேவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி எனப் பலரும் எடுத்துரைத்தனர்.

பெண்கள் நலன் காப்பதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னோடித் திட்டங்கள் சமூக நீதிக் கண்ணோட்டத்துடன் வெற்றிகரமாக செயல்பட்டதை கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் நினைவுகூர்ந்தது பெருமித நிகழ்வு. தலைவர் கலைஞரின் வழியில் திராவிட மாடல் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்கள் புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம் என வரிசையாகப் பல திட்டங்களை தந்து, இந்தியாவில் எந்த மாநிலமும் சாதிக்காத கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறை வேற்றியிருப்பதையும் பெருமை பொங்க எடுத்துரைத்தனர்.

திராவிட இயக்கத்தின் முன்னோடி அரசியல் இயக்கமான நீதிக் கட்சியின் ஆட்சியிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதையும் அதன் தொடர்ச்சியாக டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதையும்கூட எடுத்துரைத்தனர்.

கலைஞரின் பெரியார் நினைவு சமத்துவ புரம் திட்டத்தின்படி, குடும்பத் தலைவியின் பெயரில் வீட்டினைப் பதிவு செய்து கொடுத்து அவர்களை உரிமையாளராக்கியதையும் குறிப்பிட்டனர். அதே வழியில், கழகத் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள் பதிவு செய்யப்படுவதையும் குறிப்பிட்டு, இது தந்தை பெரியாரின் மண் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தனர்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை தேர்தல் ஆதாயம் கருதி நிறைவேற்றிய பா.ஜ.க.வின் இரட்டை வேடத்தையும் தோலுரித்தது மகளிர் உரிமை மாநாடு. ஜனநாயக விரோத பா.ஜ.க அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சிங்கங்களாக கர்ஜனை செய்வதையும், தங்களைப் போன்ற எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளிட்டோர் துணை நிற்பதையும் உளப்பூர்வமாக எடுத்துரைத்தனர்.

பிரதமர் மோடி உள்பட பா.ஜ.க.வின் தலைவர்கள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு சென்றாலும் தி.மு.க. மீது வெறுப்பை விதைத்து வரும் நிலையில், இந்தியாவில் பாதுகாப்பு மிகுந்த, நல்லிணக்கம் கொண்ட, சமூக நீதிக் கோட்டையாக தி.மு.க. ஆளும் தமிழ்நாடுதான் இருக்கிறது என்பதை இந்தியாவின் பெண் அரசியல் தலைவர்கள் உரக்கச் சொல்லி, டெல்லி வரை கவனத்தை ஈர்த்துள்ளனர்.

மாநாட்டில் நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடலும் திராவிட இயக்கக் கொள்கையும் இந்தியா முழுமைக்கும் தேவைப்படுவதை வலியுறுத்தி, இதே ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெற்று பா.ஜ.க.வை வீழ்த்தும் என உறுதி தெரிவித்ததையும், வடமாநிலத் தொலைக்காட்சிகள் இந்தி உள்ளிட்ட மொழிகளில் சப்டைட்டிலுடன் வெளியிட்டன.

கும்மிடிப்பூண்டிக்கு அந்தப் பக்கம் தி.மு.க.வைத் தெரியுமா என்று கேட்ட கிணற்றுத் தவளைகளின் செவிட்டில் அடித்தாற்போல தி.மு.க.வும் அதன் திராவிட மாடல் ஆட்சிநெறியும் குமரி முதல் இமயம் வரை கொடிக் கட்டிப் பறப்பதை கவிஞர் கனிமொழி எம்.பி. அவர்கள் முன்னெடுத்த மகளிர் உரிமை மாநாடு மெய்ப்பித்துள்ளது. மாநாட்டில் கழகத் தலைவர் அவர்கள் சொன்னது போல, சென்னை சங்கமம் நிகழ்வை சிறப்பாக நடத்தி வரும் கவிஞர் இந்திய சங்கமத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெண் உரிமைத் திட்டங்கள் வெறும் வாக்கு அரசியலுக்கானதல்ல, அவை பெண் விடுதலைக்கான சிறகுகள், ஆண்பெண் சமத்துவத்துன் அடையாளம். அதனால்தான் பல மாநிலங்களிலும் வந்திருந்தவர்கள், “ஸ்டாலின் அண்ணா.. கனிமொழி அக்கா” என நெஞ்சம் நிறைந்த சொற்களை வெளிப்படுத்தி மகிழ்ந்தார்கள்.

இந்தியப் பெண்களின் உரிமைக் குரலாக ஒலிக்கிறது திராவிடக் கொள்கை. அதனை உறுதிப்பட நிறைவேற்றி வருகிறார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். அனைவருக்கும் அனைத்தும் என்கிற திராவிட மாடல் இனி இந்தியா கூட்டணியின் கொள்கை முழக்கமாகி, இந்தியாவை ஆளும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை மகளிர் உரிமை மாநாட்டில் உரையாற்றியவர்கள் உறுதி செய்துள்ளனர்.

### போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி ரூ.50 ஆயிரம் கோடி மோசடி!

# அதானி நிலக்கரி ஊழலை மூடி மறைக்கும் மோடி!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 18 - இந்தோனேசியாவில் இருந்து இந்தியாவிற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி ரூ.50 ஆயிரம் கோடி அளவில் அதானி நிறுவனம் செய்துள்ள ஊழலை மோடி மூடி மறைக்கிறார் என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 17.10.2023 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தோனேசியாவில் இருந்து இந்தியா விற்கு நிலக்கரி இறக்குமதி செய்ததில் அதானி குழுமம், போலி நிறுவனங்களைப் பயன்படுத்தி சுமார் ரூ. 50 ஆயிரம் கோடி அளவிற்கு மோசடி செய்திருப்பது அம்பலமாகி இருக்கிறது.

அதானி குழுமத்தின் இந்த ஊழல் முறை கேடுகளை, இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் ‘பைனான்சியல் டைம்ஸ்’ (Financial Times) ஏடு அம்பலப்படுத்தியுள்ளது

இந்தோனேசியாவில் இருந்து இந்தியா விற்கு இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியின் விலையை இருமடங்கு அதிகமாகக் காட்டி அதானி நிறுவனம் மோசடி செய்துள்ளதாகவும், கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை தங்குதடையின்றி இந்த நிலக்கரி இறக்குமதி ஊழலை செய்து வருவதாகவும் கூறியுள்ளது.

2019 மற்றும் 2021க்கு இடையிலான 32 மாதங்களுக்குள் அதானி நிறுவனம் இந்தோனேசியா விலிருந்து இந்தியாவிற்கு மேற்கொண்ட 30 நிலக்கரி ஏற்றுமதி வர்த்தகத்தை மட்டும்



தீக்கதிர்
2023 அக்டோபர் 17 செவ்வாய்க்கிழமை
அதானி நிலக்கரி ஊழலை மூடி மறைக்கும் மோடி

ஆய்வு செய்துள்ளது. இதில், கடந்த இரண்டு ஆண்டுகளில், அதானி குழுமமானது, தைவான், துபாய் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள கடல்சார் போலி இடைத்தரகர்களைப் பயன்படுத்தி 5 பில்லியன் டாலர் (சுமார் 42 ஆயிரம் கோடி) மதிப்புள்ள நிலக்கரியை சந்தை விலையை விட இருமடங்கு விலையில் இறக்குமதி செய்துள்ளதாகவும், அனைத்து ஏற்றுமதி வர்த்தக சந்தர்ப்பங்களிலும், இறக்குமதி நிலக்கரி யின் விலையை அதிகமாகக் காட்டி, அதானி நிறுவனம் ஆதாயம் அடைந்துள்ளதாகவும் ‘பைனான்சியல் டைம்ஸ்’ கண்டறிந்துள்ளது.

துணைத் தலைவர் - என். சரவணன், ப. எண். 28, பு. எண்.2, முத்தழகு பிள்ளை தெரு, பெரிய கடைவீதி, திருச்சி - 08.

அமைப்பாளர் - **கே. விஜயகோபால்,** 121/எ, கீழ படையாச்சி தெரு, பாலக்கரை திருச்சி - 01.

துணை அமைப்பாளர்கள் - எம்.எல்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, 10எ, குருநாதன் பிள்ளை சந்து, ஜாபர்ஷா தெரு, திருச்சி - 08. ஜே. மோகன் பாபு, 64, அல்லித் தெரு, விவேகானந்தா நகர், மே.க. கோட்டை, திருச்சி - 11. ஜெ. மணிகண்டன், 162, ஜே.கே.நகர், ரோஜா தெரு, காஜாமலை, திருச்சி - 23. எம்.ராஜசேகர், 3 / 320 பி, வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, வடக்கு காட்டூர், திருச்சி - 19. பி. தங்கராஜ், 42-சி அண்ணா நகர், சங்கிலியாண்டபுரம், திருச்சி - 01.

### தூத்துக்குடி மாநகரம்

தலைவர் - ப. திருவாசகம், 58, முத்துகிருஷ்ணாபுரம் 3வது தெரு, தூத்துக்குடி.

துணைத் தலைவர் - கோ.வரதராஜன், 67, பொன்னகரம், தூத்துக்குடி -628002.

அமைப்பாளர் - **என்.எஸ்.கே. கிறிஸ்டோபர் விஜயராஜ்,** 83எ/1, முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெரு, தூத்துக்குடி - 1.

துணை அமைப்பாளர்கள் - சா. அல்லா பிச்சை, 86பி, மேலரெங்கநாதபுரம், தூத்துக்குடி - 2. நா. சுப்பிரமணியன், 54-1எ, பக்கிள்புரம் 2வது தெரு, தூத்துக்குடி. ஜே.காசிலிங்கராஜ், 306 காரபேட்டை, தூத்துக்குடி - 1. எஸ். சம்சர்கான் ராஜா, 32, ஜெய்லானி தெரு, தூத்துக்குடி - 1. ஜெ.ஆல்வின் சாலமோன் ஞானராஜ், 18பி/5, பொன்னகரம் முதல் தெரு, தூத்துக்குடி - 2.

### தஞ்சாவூர் மாநகரம்

தலைவர் - ஜி.பிரகாஷ், 19பி / 10பி, சித்ரா நகர், என்.கே. ரோடு, தஞ்சாவூர்-613006.

துணைத் தலைவர் - எம். ரபிக் முகமது, ப்ளாட் நெ. 209, எஸ்.என்.எம். நகர், டபீர் குளம் ரோடு, கீழவாசல், தஞ்சாவூர்.

அமைப்பாளர் - **டி.லெனின்,** 28, மோத்திப்பாச்சாவடி தஞ்சாவூர் .

துணை அமைப்பாளர்கள் - எம். சின்னப்பன், 19ம் தெரு, அண்ணா நகர், தஞ்சாவூர். இராம. திருப்பதி, 15, நட்சத்திர நகர் முதல் தெரு, தஞ்சாவூர். சி. சரவணன், 10, டவுன் கரம்பை வடக்கு தெரு, கீழவாசல், தஞ்சாவூர். கே.சுரேஷ்குமார், 20, சாமியாபிள்ளை தெரு, கீழவாசல், தஞ்சாவூர். எஸ். அங்குராஜ், 143, புது வாணக்காரத்தெரு, தஞ்சாவூர்.

### தென்காசி தெற்கு மாவட்டம்

தலைவர் - கே.என்.எல். சுப்பையா, 21, பூங்கொடி விநாயகர் கோயில் தெரு, தென்காசி.

துணைத் தலைவர் - பி. ஷமீம் இப்ராஹீம், 4பி/13 எ, நடுப்பேட்டை தெரு, தென்காசி.

அமைப்பாளர் - **எம். முத்துராமலிங்கம்,** 3/1/30, பண்ணை வீட்டு தெரு, அச்சன்புதூர்.

துணை அமைப்பாளர்கள் - எஸ். சங்கரராமன், வேலாயுதம் ரோடு, சாம்பவர்வடகரை -627856. டி.ராமராஜ், 1வது வார்டு உறுப்பினர், ஆ- 202, ஹவுசிங் போர்டு காலனி, தென்காசி. டி.நாகராஜ், 13/4/4, இராமசாமிபுரம் ஆஷிடையானூர். என். பஞ்சு அருணாசலம், சிவகாமிபுரம், நல்லூர் அஞ்சல். எல். லெட்சுமணன் 6/6, தெற்கு தெரு, இராவுத்தபேரி, துப்பாக்குடி ஊராட்சி. எம். முத்துசுப்பிரமணியன், 9-7-122/1, சந்தை பஜார், சுரண்டை. என். பாலசுப்ரமணியன், 39, ஊச்சி மகாளியம்மன் கோவில் தெரு, கீழப்புலியூர், தென்காசி. எஸ். வேலு, 4/143, மறவர் மேலத்தெரு, கழுநீர்குளம். எஸ். சரவணன், 1-3-51, வடக்குத் தெரு, சீவநல்லூர். ஆ. ஈஸ்வரன், 42, செவல்விளை, தேவர், 3ம் தெரு, கடையநல்லூர்.

### தேனி வடக்கு மாவட்டம்

தலைவர் - முகமது ரபீக், பள்ளிவாசல் இரண்டாவது தெரு, தண்டுபாளையம் - பெரியகுளம்.

துணைத் தலைவர் - அ.சு.ராஜன், கிழக்கு தெரு, பூமலைக்குண்டு.

அமைப்பாளர் - **வி.ஆர்.ராஜன்,** 13, ஹைஸ்கூல் தெரு, அல்லிநகரம்.

துணை அமைப்பாளர்கள் - கே.சி. கண்ணன், மேற்கு தெரு, ஜி. கல்லுப்பட்டி. ஆர். சிராஜுதீன், சப்-ரிஜிஸ்டார் அப்துல் காதர் தெரு, போடிநாயக்கனூர், பெத்தனசாமி, ஜெயந்தி காலனி, வடுகப்பட்டி, பெரியகுளம். ஏ.பாசித் ரகுமான், சித்தீஸ்வரன் கோவில் சந்து, வடகரை, பெரியகுளம். வி.மனோஜ்குமார், அம்பேத்கார் தெரு, போடி - மீனாட்சிபுரம்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டம்

தலைவர் - இ. அனஸ், 1/92, முகமதியார், 2வது தெரு, சூழை வாய்க்கால், தூத்துக்குடி -628802.

துணைத் தலைவர் - நெ. பாஸ்டின், வில்லவராயன், 3/27/41-எ1, ஆசிரியர் காலனி, குமாரபுரம், திருச்செந்தூர், தூத்துக்குடி -628215.

அமைப்பாளர் - **எஸ்.எ. கலீல் ரகுமான்,** 204/119, தீவுத்தெரு, காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம் - 628204.

துணை அமைப்பாளர்கள் - இரா. ராஜேஷ், எண்.1, பிஷப் டப்ஸ் தெரு, சாயர்புரம், ஏரல் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்-628251. எஸ். முஹம்மது நஜீர், 118/30 சி, கி.மு.கச்சேரி தெரு, காயல்பட்டணம், தூத்துக்குடி -628204. என். ஜோயல் மகேஷ் ஜெயஹர், 32, இரண்டாம் தெரு, நாசரேத், தூத்துக்குடி- 628617. பி. டேனியல் ஜெபசிங், 127/41-எ1, ஆசிரியர் காலனி குமாரபுரம், திருச்செந்தூர், தூத்துக்குடி-628215. எஸ்.ஷபீக் ரஹீமான், 56, சிதம்பர தெரு, உடன்குடி, தூத்துக்குடி -628203. சை.நசீர், 2/220, முஸ்லீம் பெரிய தெரு, குரும்பூர், தூத்துக்குடி-628207. எ. ரியாஸ் அஹமது, 6/87, முஸ்லிம் மேலத் தெரு, தெற்கு ஆத்தூர், மேலாத்தூர், தூத்துக்குடி-628251. ப.சஞ்சய் சொக்கலிங்கம், 1/103, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு, வல்லநாடு, தூத்துக்குடி-628203. அ. மரிய சூசை சுரேஷ், 2/305, பிஎஸ்பி நகர், மெயின் தெரு, கோரம்பள்ளம், தூத்துக்குடி. எஸ்.எ.கே. செய்யது மீரான், 167/99, மொஹ்தூம் தெரு, காயல்பட்டணம், தூத்துக்குடி மாவட்டம் -628204. எ.முத்துமாலை, 13/8, திருச்செந்தூர் ரோடு, ஏரல் தாலுகா, தூத்துக்குடி -628801. ஆர். கதிரேசன், 4/145, மெயின் ரோடு, உமரிக்காடு, ஏரல் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்- 628151.

### திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

தலைவர் - ஆ.மு. நாட்டுத்துரை, கொ. கீரனூர், ஒட்டன்சத்திரம், வட்டம்.

துணைத் தலைவர் - மு.சேக் அப்துல்லா, அன்னை மீனாட்சி நகர், செல்லப்பநாயக்கன்பட்டி, நத்தம் வட்டம்.

அமைப்பாளர் - **க. ஜெயராஜ்,** குறிஞ்சி நகர், ஒட்டன்சத்திரம் நகரம், ஒட்டன்சத்திரம் வட்டம்.

துணை அமைப்பாளர்கள் - கு. அய்யனார், கண்ணமனூர், மருனூத்து, சாணார்பட்டி, திண்டுக்கல் வட்டம். ரா.பாலு செல்வ விநாயகர் கோயில் தெரு, கீரனூர், பழனி வட்டம். பரி (எ) ஹ. சேக்பரித், கிழக்கு தெரு, மார்க்கம்பட்டி, ஒட்டன்சத்திரம் வட்டம். கோ. மணிமாறன், நேருஜி நகர், வேடசந்தூர், பேரூர், வேடசந்தூர் வட்டம். வே. சிவா, சிக்காளிபட்டி, வடமதுரை, பேரூர், வேசந்தூர், வட்டம்.

### சென்னை தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - என். சுதாகர், 22/34, பார்த்தசாரதி கோவில் தெரு, ஈக்காட்டுதாங்கல், சென்னை -600032.

### சென்னை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எஸ். கார்த்திகேயன், 148/262, மேல்பட்டி பொன்னப்பன் தெரு, வியாசர்பாடி, பெரம்பூர், சென்னை -600036. எம். கோபிநாத், 29/10, என்.என். கார்டன், 1வது லேன், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை -600021. முகமது சலாவுதீன், 81/30, தர்மராஜா கோயில் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை -600021.

### சென்னை மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - சி.எஸ்.ஆர்.சந்தோஷ், 14/4, காளியம்மன் கோவில் 2வது தெரு, மக்கிஸ் காரடன், கிரிம்ஸ் ரோடு, சென்னை-6.

### ஈரோடு தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - பி. விஜயகாந்த், 13 காளிங்கராயன் நகர், வாய்க்கால்கரை, கருங்கல்பாளையம், ஈரோடு. கே.எல். பிரபாகரன், 4/31, மாரியம்மன் கோவில் தெரு, மூலப்பாளையம், எலவமலை, ஈரோடு - 638316. ரா. ராஜேஷ், 3/335, எச், பசுமை பார்க், பள்ளக்காட்டூர், சுள்ளிப்பாளையம், பெருந்துறை -638057.

### பெரம்பலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஜோ. லெனின் ராஜா, 36, வடக்கு காலனி, அரனாரை, பெரம்பலூர். ஜெ. சீனிவாசன், 3/122, தெற்கு தெரு, குன்னம் போஸ்ட், பெரம்பலூர்-621708. மு. வேல்முருகன், 139எ, அவ்வையார் ரோடு வது வார்டு, துறைமங்கலம் பெரம்பலூர். எஸ்.எஸ். விஜய், 4/95, இளங்கோ நகர், அய்யலூர் போஸ்ட், பெரம்பலூர்-621113 .

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எச்.கே.வெங்கடேசன், 13, குமாரசாமி தெரு, லட்சுமிபுரம், குரோம்பேட்டை, சென்னை-600044. ஆர்.கே. ஞானம், 15/24, கண்ணபிரான் கோயில் தெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை, சென்னை -600044. ப. பிரபாகரன், 17, மேட்டு தெரு, அனகாபுத்தூர், சென்னை 600070. என். சிவப்பிரகாசம், 16, பஜனை கோயில் தெரு, நெல்வாய், மேற்கு தாம்பரம், சென்னை -603107 .

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - இ. செந்தில், 17, முதல் தெரு, பணையூர் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு. கே.முத்து, 10, பெரியார் தெரு, சித்தாமூர், செய்யூர், செங்கல்பட்டு -603313.

### கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - சு. பெகின், அன்பு இல்லம், பத்தம் பாளை, பணுகள்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆ. அசோக்குமார், 21, கிழக்கு காந்திபுரம், குமாரபாளையம். மு.லோகவிசயன், 5/23-1 பத்திரகிரியாட் தெரு, 2வது வீதி, குமாரபாளையம், நாமக்கல் - 638138. அ. சுடலை ராஜ், 1/18, டி-4, சத்யாபுரி ஹை ஸ்கூல் ரோடு, குமாரபாளையம்.

### திருவாரூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - கே.சிவசண்முகம், இராமர் கோவில் தெரு, சோலைகுளம் ஊராட்சி, குறிச்சிமூலை தாலுகா, திருவாரூர்-614710. ந. மணிகண்டன், தெற்கு கொத்த தெரு, திருவாரூர் 612804. கே. ராஜசேகரன், 3/102 வடக்கு தெரு, ஆண்டாங்கோயில், வலங்கைமான், திருவாரூர்- 612804.

### திருப்பத்தூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஹமீதுதீன், 352 மலையடிவாரம் கடம்பூர், திருப்பத்தூர்-635808. எம். தியாகராஜன், 5/169, திருவள்ளுவர் தெரு, எம்.சி ரோடு, பெரியன்குப்பம், ஆம்பூர், திருப்பத்தூர்-635814.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எம். விஜயகுமார், 340, ஜெய் நகர் 3வது வீதி, ரக்கியாபாளையம், திருப்பூர்-641606. எல். குருபரணி, 4/570, ஸ்ரீ கிருஷ்ணாநகர் மெயின் ரோடு, தாராபுரம் மெயின் ரோடு, முத்தனம்பாளையம், திருப்பூர் -641606. மு.ஆனந்த் 33/33, ஏபிஜ அவின்யு, சபரி பிரியா நகர், முத்தனம்பாளையம் ரோடு, நல்லூர், திருப்பூர் -641606.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - க. ரவி, 8/71, குமாரபாளையம், கோட்டமங்கலம் அஞ்சல், உடுமலைபேட்டை, திருப்பூர் -642201. ச. சம்பத்குமார், 4/89 எ, சின்னபுதூர், செல்லம்பாளையம், உடுமலை, திருப்பூர்-642207. மா. கார்த்திகேயன், 122, புதுக்கோட்டை மெட்டு தெரு, தாராபுரம், திருப்பூர்.

### சேலம் மத்திய மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆர். ஸ்ரீனிவாசன், 3/7, மனத்தால் ஓமலூர், சேலம். எஸ். விஜய பாலாஜி, 13, கோவிந்தன் ஏகல்டின்சன், அஸ்தம்பட்டி, சேலம்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - மு. ஜோதிவேல், 66, நாடார் தெரு, சிங்கிபுரம், வாழப்பாடி, சேலம்- 636115. வி. மகேந்திரன், 464, அம்பேத்கார் நகர், லீ பஜார், புதுப்பேட்டை ஆத்தூர்.

### சேலம் மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ப. வெங்கடேசன், 4/145, வெள்ளாளபுரம், எடப்பாடி, சேலம். ஆ. சுரேஷ், துட்டம்பட்டி பைபாஸ், துட்டம்பட்டி அஞ்சல், ஓமலூர், சேலம்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எஸ். மார்டின், 220, ஆஞ்சநேயர் கோயில் தெரு, என்.ஜி.ஓ நகர், திருக்கோவிலூர் -605757. எம்.எ.ஷாருக் அஹமது, முகமதியார் தெரு, மந்தைகரை, விழுப்புரம்-605602. அ. பிரபு, 146, கடலூர் மெயின் ரோடு, திருக்கோவிலூர் -605757. மா. கிரண் 24 அண்ணா நகர், தாசர்புரம், திருக்கோவிலூர் -605757.

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எம். சரவணன், 50, இந்திரா நகர் மைலம் ரோடு, திண்டிவனம். கா. கோபிநாத், 218, மாரியம்மன் கோவில் தெரு, தென்நெற்குணம், திண்டிவனம்- 604102. பா. சக்திவேல், 107, புதிய காலனி மெயின் ரோடு, பாஞ்சாலம் அஞ்சல், திண்டிவனம்- 604307.

### கோவை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - வி. டேவிட் ராஜா, 27, அன்னம்மா நாயக்கர் வீதி, குனியமுத்தூர், கோயம்புத்தூர்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - அ. முஹமது அன்சாரி, 18, சேரன் தெரு, பழனி, திண்டுக்கல் -624601.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - கா. அரிதரன், 235, திருநீலகண்டர் வீதி, பவானி, ஈரோடு -638301. மூ.முருகன், 277, பவானி ரொடு அந்தியூர் -638301.

### கடலூர் மேற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - இரா. கார்த்திக், 27/30, பழைய ஜெயில் தெரு, விருத்தாசலம் -606001.

### கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆ.வேளாங்கன்னி, 4/151, மாதாகோவில் தெரு, தாசர்புரம், ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி -606205. ந. துரைபாண்டி, 43/20 தெற்கு தெரு, சின்ன சேலம் கள்ளக்குறிச்சி -606201. செ.தினேஷ், 1/114 தெற்கு தெரு, கோமளூர், கோமளூர் அஞ்சல், கள்ளக்குறிச்சி.

### மயிலாடுதுறை மாவட்டம்

துணை அமைப்பாளர் - ரா. ஸ்டாலின், 2/122, தில்லைவிடங்கன், மாதனம் அஞ்சல், சீர்காழி, மயிலாடுதுறை-609104.

### நாகப்பட்டினம் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ரா. கார்த்திகேயன், 1/176 காளியம்மன் கோவில் தெரு, ஐவநல்லூர் மஞ்சகொல்லை நாகப்பட்டினம் -611106. கே. நாராயணசாமி, 2/85, மேலத்தெரு, அழிஞ்சமங்கலம், பாளையூர் போஸ்ட், நாகப்பட்டினம். வீ மகாராஜன், 2/72-1, வடக்குத்தெரு, வடக்குப் பொய்கைநல்லூர், நாகப்பட்டினம்-611106.

### இராமநாதபுரம் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - பழ. பிரதீப்பழனிவேல், 28, சத்திர தெரு, வெளிபட்டினம், இராமநாதபுரம்- 623504. க. லோகநாதன், 18/29, வீரபத்திரசாமி கோவில் தெரு, இராமேஸ்வரம் இராமநாதபுரம் -623526. ஒ.எம்.எஸ்.மஹாதீர், 6/779, மேற்கு ரமலான் தெரு, வழுதுர்-623536.

### சிவகங்கை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ம. சுதர்சன், 22, அம்பேத்கர் தெரு, தேவகோட்டை, சிவகங்கை -630302. ர.சௌந்தரராஜன், 715, காட்டுப்புளி, உடைகுளம், கூத்தாண்டன், காளையார்கோவில், சிவகங்கை.

### தென்காசி வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - எம். செல்லதுரை, 10-டி பசும்பொன் முதல் தெரு, வாசுதேவநல்லூர், தென்காசி -627758.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

துணை அமைப்பாளர் - கு. சரவணன், பூஞ்சோலை தெரு, பூங்கா நகர், காக்களூர் திருவள்ளூர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - கு. ராஜசேகர், 1/17 லெட்சுமி விலாஸ் தெரு, கும்பகோணம்-612001. க.கார்த்திக், 4/263 பொன்மலை தெரு, சூலமங்கலம், பாபநாசம், தஞ்சாவூர் -614206. ர. ரஞ்சித், 6/15 எச், கீழத்தெரு, இளங்கார்குடி, பாபநாசம் தஞ்சாவூர்-614203 .

### திருச்சி தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - சு. முருகேசன், 52/14, நேதாஜி தெரு, புத்தாநத்தம் ரோடு, மணப்பாறை -621306.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஏ. விஜயன், 16/13, அம்மணி அம்மன் நகர், கீழ்ணதூர், திருவண்ணாமலை. வீ.கருணாகரன், 12ஏ, சின்ன மாரியம்மன் கோவில் தெரு, செ.அகரம், பாலியப்பட்டு, திருவண்ணாமலை -606704.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர் - ஆர். செந்தமிழன், 14, அன்னை கஸ்தூரிபா தெரு, களம்பூர்-606903. போளூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம்.

### வேலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - சு. நாகராஜன், 166/1, திருவள்ளுவர் தெரு, பிரம்மபுரம், காட்பாடி, வேலூர்-632014. ரா. சந்துரு, 5ஆ, 2வது தெரு, திருநகர் விரிவு, காட்பாடி, வேலூர் -632014.

### திருச்சி மத்திய மாவட்டம்

துணை அமைப்பாளர் - எம். கருப்பசாமி, 20/135, ராஜா தெரு, பெரிய மிளகுபாறை, திருச்சி- 620001.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - டி. ஆர். குமார், தெற்கு 4ஆம் வீதி புதுக்கோட்டை. தியாக இளஞ்செழியன், வெட்டன்விடுதி, கறம்பக்குடி தாலுகா. செல்வராஜ், அய்யக்கோன்பட்டி, புதுக்கோட்டை தாலுகா. மணி. சின்னக்காளை, தச்சன்பட்டி, அன்னவாசல், இலுப்பூர். கை. பழனிச்சாமி, அண்ணாப்பட்டி, சத்தியமங்கலம். சுதர்சன், 4/781-1, மேல மழையூர், கறம்பக்குடி. சி.வி. கிருஷ்ணன், 472, மாதிராபட்டி தேராவூர் (அஞ்சல்), விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். ஆர். கருப்பையன், 15/1 எ, வடக்கு தெரு, நெப்புகை, அந்தம்பட்டி (அஞ்சல்), கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**எம்.எம்.அப்துல்லா, எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி.

## கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும்

# தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

### அண்ணாநகரில் நடைபெற்ற விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, அக். 18 -**

**“கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு” என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அண்ணாநகரில் நடைபெற்ற விழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிருக்கு தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சி அண்ணா நகரில் 15.10.2023 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

“300 மாணவர்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் கல்வி உதவித்தொகை மற்றும் 750 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், சட்டமன்ற மன்ற உறுப்பினர்களுக்கும், பகுதி, கழக நிர்வாகிகளுக்கும், என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு மாவட்டக் கழகச் செயலாளர் சொன்னதைப்போல மழை ஒரு பக்கம் பயமுறுத்திக் கொண்டிருந்தாலும் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கு எனது தனிப்பட்ட வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாணவர்கள் பக்கம்
நிற்கின்ற இயக்கம் தி.மு.க.!**

இன்று காலை விளையாட்டுத்துறையின் சார்பாக, வேறொரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அந்த நிகழ்ச்சி மழையிலேயே நடந்தது. சைக்கிள் போட்டி. எனவே இந்த நிகழ்ச்சி மழையிலேயே நடக்கும் என்ற எண்ணத்தோடுதான் நான் வந்தேன். இருந்தாலும், நீங்கள் அத்தனைப்பேரும் பொறுமையோடு இந்த நலத்திட்டங்களையெல்லாம் பெற வந்துள்ளீர்கள்.

ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி என்றைக்கும் மாணவர்கள் பக்கம் நிற்கின்ற இயக்கம்தான், திராவிட முன்னேற்றக் கழகம். அதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே சிறந்த எடுத்துக்காட்டு.

இன்னும் சொல்லப்போனால் இதே திடலில் பல நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நானே கலந்துகொண்டுள்ளேன். இங்கு நம்முடைய அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது சொன்னார். அவர் செய்த பல்வேறு நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் சொன்னார்கள். அவர் ஒரு திட்டத்தைச் சொல்ல மறந்து விட்டார்.

மாற்றுத்திறனாளிகளை சினிமா படத்திற்கு அழைத்துச் சென்றேன். கடற்கரைக்கு அழைத்துச் சென்றேன். அப்படியெல்லாம் சொன்னார். ஆனால், அவர் தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மாற்றுத் திறனாளிகளையெல்லாம் ஒருங்கிணைத்து சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் இருக்கக் கூடிய விளையாட்டு மைதானத்திற்கு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கும் அவர் அழைத்துச் சென்று வந்தார். அதைச் சொல்ல அவர் மறந்துவிட்டார். அதை இந்த நேரத்திலே நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.

**திட்டங்களை சிதைக்கப் பார்க்கும்
ஒன்றிய அரசு!**

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மாணவர்களால் உருவான இயக்கம். அதனால்தான் தி.மு.கழகத்தின் எந்தவொரு முக்கிய நிகழ்வினை எடுத்துப் பார்த்தாலும், அதில் மாணவர்களுடைய பங்களிப்பு இருக்கும். நாடே போற்றுகின்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தி, 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் மகளிருக்கு மாதாமாதம் 1000 ரூபாய் வழங்கப்படுகின்றது. சென்ற மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்த மாதம் ஒவ்வொரு மகளிருக்கும் பயனாளிகளுக்கும் 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் மகளிருக்கு இரண்டாவது தவணையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது.

இப்படியெல்லாம் பார்த்துப் பார்த்து நாம் திட்டங்களைத் தீட்டினால், ஒன்றிய அரசு, இவற்றையெல்லாம் சிதைக்கப் பார்க்கின்றது. நீட் நுழைவுத்தேர்வை கலைஞர் ரத்துச் செய்தார். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருக்கும்போது நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குள் வரவில்லை. ஆனால், நீட் தேர்வு எப்படி தமிழ்நாட்டிற்குள் வந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

**‘நீட்’: மாணவர்களின்
கனவை சிதைத்த ஒன்றிய அரசு!**

நீட் தேர்வைக் கொண்டு வந்து நம் மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்த ஒன்றிய அரசு, தற்போது, மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்களைத் தொடங்குவதற்கும் தடை போட்டுள்ளது. ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே மதம் - ஒரே உணவு என மாநிலங்களுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

அதிக வரி செலுத்துகின்ற மாநிலத்துக்குக் குறைந்த மக்களவைத் தொகுதி என்பதை ஒருபோதும் நாம் ஏற்க முடியாது. 2014ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு இந்த ஒன்பது ஆண்டுகளில், மாணவர்கள் நீங்கள் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

2014 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு ரூ.5 லட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு வரியாக, நிதியாகக் கட்டியுள்ளது. இந்த ஒன்பது ஆண்டுகளில் நாம் கொடுத்தது 5 இலட்சம் கோடி. ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்தது வெறும் 2 இலட்சம் கோடி. ஆனால், 3 லட்சம் கோடி மட்டும் வரி கட்டிய உத்தரப்பிரதேசத்துக்கு, கடந்த 9 ஆண்டுகளில் 9 லட்சம் கோடி அளவுக்கு வரிப்பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. இந்த அநீதியைத்தான் நாம் ஒழிக்க வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கிறோம்.

**விளையாட்டுத் துறையிலும் பாகுபாடு!**

இந்த விளையாட்டுத்துறையிலும் இதே பாகுபாடு தொடர்கிறது. குஜராத் மாநிலத்திற்கு, சென்ற ஆண்டு விளையாட்டு மேம்பாட்டு நிதியாக ஒன்றிய அரசு வழங்கியது, விளையாட்டு மேம்பாட்டு கட்டமைப்புகள், ஸ்டேடியம் கட்டமைப்பதற்கு ஒன்றிய அரசு குஜராத் மாநிலத்திற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா 608 கோடி ரூபாய். ஆனால், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய நிதி 38 கோடி ரூபாய். குஜராத்திற்கு 608 கோடி, ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் 38 கோடி ரூபாய்.

ஆனால், குஜராத் மாநிலம், சமீபத்தில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், எவ்வளவு பதக்கம் வாங்கினார்கள் தெரியுமா, ஒரு பதக்கத்தைக் கூடப் பெறவில்லை. தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் 28 பதக்கங்களைப் பெற்று நமக்கெல்லாம் பெருமை சேர்த்திருக்கிறார்கள். கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறையிலும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து வருகின்றது.

இந்திய பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும், நம்முடைய தலைவரைப் பற்றியும், நம்முடைய கழக அரசசைப் பற்றியும்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்கு எப்போது பார்த்தாலும் நம்மைப் பற்றித்தான் ஞாபகம். என்ன சொல்கிறார் தெரியுமா?

தி.மு.க.வுக்கு வாக்களித்ததால், கலைஞர் குடும்பம்தான் வாழுகின்றது என்று சொல்கிறார். ஆமாம் நான் சொல்கிறேன் தமிழ்நாடு முழுவதும் நம்முடைய கலைஞருடைய குடும்பம்தான். நான் இப்போது உங்களைப் பார்த்துத் திருப்பிக் கேட்கின்றேன். ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்களே, ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சி செய்திருக்கிறீர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று உங்களால் பட்டியலிட முடியுமா? என்று நான் கேட்கிறேன்.

ஒவ்வொருத்தருடைய வங்கிக் கணக்கில் 15 லட்சம் போடுகிறேன் என்று சொன்னீர்களே போட்டீங்களா. குறைந்தது 15 காசாவது போட்டீங்களா, எதுவும் செய்யவில்லை. ஆனால், உங்களுடைய ஒன்பது ஆண்டு ஆட்சி காலத்தில் ஒரே ஒரே குடும்பம் மட்டும் வாழ்ந்தது. யாரு அந்தக் குடும்பம். உங்களுடைய நெருங்கிய நண்பர் அதானி அவர்கள். அதாவது அரசிடம் இருக்கக்கூடிய அனைத்து



பொதுத்துறையையும் தூக்கி அதானி கையில் கொடுத்துவிட்டார் பிரதமர்.

அதானி ஏர்போர்ட் வந்துவிட்டது, அதானி இரயில்வே வந்துவிட்டது, அதானி சாலை வந்துவிட்டது, அதானி மின்சாரம், அதானி துறைமுகம் இப்படி அனைத்தையும் அதானி கிட்ட தூக்கி கொடுத்துவிட்டார். நான் பல முறை நகைச்சுவையாகச் சொல்வதுண்டு. மோடி அவர்கள் தொடர்ந்து வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டே இருப்பார். அப்போது சொல்வேன், நீங்கள் விமானத்தில் போறீங்க, விமானி இல்லாமல் கூடப் போவீங்க, ஆனால், அதானி இல்லாமல் போக மாட்டீங்க என்று. இதைத்தான் நம்முடைய காங்கிரஸ் பேரியக்க தலைவர் ராகுல் காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டார். ஆனால் இப்போது வரைக்கும் அதற்குப் பதில் கிடையாது.

ஹிண்டன்பெர்க் என்ற ஆய்வு செய்கின்ற ஒரு நிறுவனம். ரிசர்ச் செய்கின்ற ஒரு அமெரிக்க நிறுவனம். அவர்கள் ஒரு தனியார் நிறுவனம் 9 வருடத்தில் எப்படி இவ்வளவு வளர்ச்சி அடைந்தது என ஆய்வு வெளியிட்டார்கள். அதானி அவர்கள் அப்போது உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம். இதையெல்லாம் இந்த ஹிண்டன்பெர்க் நிறுவனம் கேள்வி கேட்டார்கள். ஆனால், இதுவரைக்கும் மோடி அவர்களோ, பா.ஜ.க.வோ இதைப் பற்றி வாய் திறக்கவே இல்லை.

**மின் கட்டணம் உயர அதானிதான் காரணம்!**

இப்போது சமீபத்தில் லண்டனிலிருந்து வருகின்ற ‘பினான்சியல் டைம்ஸ்’ இன்னொரு முறைகேட்டையும் வெளியிட்டுள்ளது. அதாவது இன்றைக்கு நாட்டின் பல இடங்களில் மின்சாரக் கட்டணம் உயர்ந்ததற்கு அதானிதான் காரணம் எனப் பினான்சியல் டைம்ஸ் ஆதாரத்தோடு கட்டுரை எழுதியுள்ளது.

அதுமட்டுமல்ல, சமீபத்தில் வந்த CAG அறிக்கை. Controller of Audit General. இந்த அமைப்பின் வேலை என்னவென்றால் மத்திய அரசு, மாநில அரசு செய்கின்ற செலவுகளைத் தணிக்கை செய்வது. இதைப் பார்த்தால் சி.ஏ.ஜி அறிக்கைப்படி இந்த 9 ஆண்டுகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு கணக்கே கிடையாது. ஏழரை இலட்சம் கோடி ரூபாய் எங்கே போனது என்றே தெரியவில்லை.

ஆயுஷ்மான் பாரத் என்ற ஒரு திட்டம் அதில் இறந்துபோன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல துவாரக் அப்படி என்ற ஒரு திட்டம். துவாரக் மாலா என்ற ஒரு திட்டம். இதில் 1 கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு ரூ.250 கோடி செலவு செய்திருப்பதாக இந்த சி.ஏ.ஜி. ரிப்போர்ட் சொல்கிறது. இதைத் தொடர்ந்து நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் வாய்த் திறக்க வழியில்லை.

**கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான ஆட்சி!**

இதுமட்டுமல்ல, இந்த 9 ஆண்டுகளில் ரூ.12 லட்சம் கோடி மதிப்பிலான கார்ப்பரேட் கடன்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இது முழுக்க முழுக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான ஆட்சி இந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்று மோடி சொன்னார்கள். ஆனால், 5 லட்சம் வேலைவாய்ப்பைக் கூட இதுவரை உருவாக்கவில்லை.

2014 ஆம் ஆண்டு மோடி அவர்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதி என்ன? இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன். எப்போது தெரியுமா சொன்னார். 2014-ஆம் ஆண்டு சொன்னார். 2020-இல் இந்தியா வல்லரசாக மாறியிருக்கும் என்றார். இப்போது 2023-இல் திருப்பியும் அதையே சொல்கிறார். என்ன தெரியுமா சொல்கிறார். இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன். எப்போது தெரியுமா? 2047இல் மாற்றிக் காட்டுவேன் என்று சொல்கிறார்.

**இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்றவர்
‘பாரத்’ என மாற்றி காட்டுகிறார்!**

ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களை நாம் அனைவரும் பாராட்டியே ஆக வேண்டும். என்ன சொன்னார், இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்று சொன்னார். இப்போது என்ன செய்கிறார் இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்றுகிறார்.

இங்கே ஒரு எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறதா என கேட்டால் எதிர்க்கட்சி என்று பேருக்குத்தான் சொல்வார்கள். என்றைக்காவது அவர்கள் மக்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்களா? அவர்கள் பிரச்சினை எல்லாம் எப்போதுமே நாற்காலி பற்றித்தான் யோசனை. இப்போதுகூட, சட்டசபையில் அவர்கள் மக்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள் என்று நினைக்கிறீர்களா, மக்கள் பிரச்சினைகளுக்காக வெளிநடப்புச் செய்தார்கள் என்று நினைக்கிறீர்களா இல்லை. யார் பக்கத்தில் யார் உட்கார வேண்டும். எங்களுக்கு அவர் பக்கத்தில் உட்கார முடியாது, இவர் பக்கத்தில் உட்கார முடியாது. எங்களுக்கு உட்காரும் இருக்கையை மாற்றிக் கொடுங்கள். இதுதான் எதிர்க்கட்சியினுடைய பிரச்சினை.

5 முறை தமிழ்நாட்டை ஆட்சி செய்த, இந்திய ஒன்றியத்தின் மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடல்நிலையைக் கருதி, அப்போது நாம் எதிர்க்கட்சி. நாம் ஒரு வேண்டுகோள் வைத்தோம். கலைஞர் அவர்கள் சட்டப்பேரவைக்கு வந்து செல்லும்படி இருக்கை வசதி செய்து கொடுங்கள் என்று. அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதைச் செய்து கொடுக்காதவர்கள் இப்போது நாற்காலியைப் பற்றிப் பேசுகிறார்கள்.

இப்போது பா.ஜ.க.வினரும் - அ.தி.மு.க.வினரும் ஒரு புதிய நாடகத்தைத் தொடங்கியுள்ளார்கள். பா.ஜ.க. அணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறிவிட்டது என்று ஒரு நாடகம். இது முதல்முறை கிடையாது. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும், பின்பும் அவர்கள் இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள். மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தைரியமாகக் கேட்டார்கள். மோடியா, இல்லை இந்த லேடியா என்று கேட்டார்கள். ஆனால், இந்த அடிமைகள், எல்லாம் என்ன சொன்னார்கள். மோடிதான் எங்கள் டாடி என்று சொன்னக்கூட்டம்தான் இந்த அடிமைக்கூட்டம்.

நீட் தேர்வு, ஜி.எஸ்.டி உதய் மின் திட்டம், தேசிய கல்விக்கொள்கை, வேளாண் விரோத சட்டங்கள், குடியுரிமைத் திருத்த சட்டம் என ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த அத்தனை மக்கள் விரோத சட்டங்களையும் ஆதரித்து நாடாளுமன்றத்தில் வாக்களித்தவர்கள்தான் இந்த அடிமை அ.தி.மு.க.வினர். தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பறித்து வந்த போதும் 2019 நாடாளுமன்றத் தேர்தலின்போதும், 2021 சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து பா.ஜ.க.வோடு இந்த அடிமைகள் கூட்டணி வைத்தார்கள், இது மக்களுக்குத் தெரியும்.

இதையெல்லாம் செய்துவிட்டு, இன்றைக்கு தமிழ்நாட்டின் உரிமையைக் காப்பதற்காகத்தான் கூட்டணியில் இருந்து வெளியேறினோம் என்று பொய் சொல்லுகின்றார்கள். இப்போது கூட்டணியை முறித்துக் கொண்டது கூட காவிரி பிரச்சினைக்கோ, நீட் தேர்வுக்காகவோ அல்லது தமிழ்நாட்டினுடைய உரிமைகளுக்கோ கிடையாது.

**அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிவு
நாடகம் எதற்காக?**

எதார்த்த உண்மை என்னவென்றால்,, பா.ஜ.க.வோடு கூட்டணியை முறித்துக் கொள்வதாக அறிவிக்கும் தைரியம் அடிமைகளுக்குக் கிடையவே கிடையாது. அவர்கள் இப்போது செய்வது வெறும் நாடகம் மட்டுமே. அந்த script கூட மோடியும் அமித்ஷாவும் எழுதி கொடுத்ததுதான். கூட்டணி முறிவு என்று சொல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள். டெல்லிக்குச் சென்று வந்தார்கள். அது எப்படியென்றால் யாருக்குமே தெரியாமல். அங்கே சென்று பா.ஜ.க. தலைவர்களையெல்லாம் சந்தித்து வந்தார்கள்.

திருட்டுத்தனமாகச் சந்தித்து வந்தார்கள். சென்னையிலிருந்து டெல்லிக்கு எப்படித் தெரியுமா போனார்கள்? இங்கிருந்து 2 முன்னாள் அமைச்சர்கள் கொச்சின் சென்று, அங்கிருந்து டெல்லிக்கு, இந்தப்பக்கம் 2 அமைச்சர்கள் பெங்களூருவிலிருந்து டெல்லிக்குப் போனார்கள். ஏனென்றால் யாருக்கும் தெரியக்கூடாதாம். அப்படிப்பட்ட அந்த அடிமைகள் கூட்டம்தான் இங்கு இருந்து கொண்டிருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி மட்டுமல்ல, அ.தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் அதே கருத்தைத்தான் இப்போது சொல்வார்கள். நாம் ஏமாறுவோம் என்று நினைக்கிறார்கள். தயவுசெய்து தமிழ்நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, சிறுபான்மை மக்கள் நலன் காப்போம் என்று நாடகம் போடுகிறார். ஆனால் இந்த நாடகமெல்லாம் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

**வெல்வது ‘இந்தியா’ கூட்டணிதான்!**

அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு மக்களுக்கு இரண்டுமே ஒன்றுதான். பா.ஜ.க.தான் அ.தி.மு.க., அ.தி.மு.க.தான் பா.ஜ.க.. இவர்கள் தனியாக வந்தாலும் சரி. சேர்ந்து வந்தாலும் சரி. வெல்லப்போவது என்னவோ நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். நம்முடைய இந்தியா கூட்டணிதான்.

இங்கே அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதேபோல் சிற்றரசு அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். நாங்கள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக அறிவித்தாலும், எங்களுக்குள் ஒரு போட்டி எந்தத் தொகுதி அதிகமான வாக்குகளை பெறுகிறது. வெற்றி பெறுவதற்கான வாக்கு வித்தியாசம் சேப்பாக்கமா அல்லது அண்ணா நகரா என்று எங்கள் மூன்று பேருக்குமே ஒரு ஆரோக்கியமான போட்டி நடந்துகொண்டிருக்கிறது.

கண்டிப்பாக மூன்று பேருமே அதற்காக முழுவதுமாக உழைப்போம். மக்கள் நலப் பணிகளிலே ஈடுபடுவோம். தொகுதிக்கு என்ன தேவையோ அதை நாங்கள் செய்து கொடுப்போம். ஆனால், அதைச் செய்து கொடுத்ததற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர், வருகின்ற சட்டமன்றத் தேர்தலின் போது எங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

எனவே, 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அடிமைகளை விரட்டி தமிழ்நாட்டுக்கு விடியலைத் தேடித்தந்தார் நம்முடைய முதல்வர் அவர்கள், வருகின்ற 2024-இல் இந்தியா கூட்டணி மூலம், அடிமைகளின் ஓனர்களான பாசிஸ்ட்டுகளையும் இந்தியாவை விட்டு விரட்டுவோம் என்று கூறி, ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் நம்முடைய தலைவர் அவர்கள்தான் விடியலைத் தர இருக்கின்றார்கள். அதற்கு நாமெல்லாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியினுடைய செயலாளருமான தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் எழிலன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராமலிங்கம், பரமசிவம், மா.பா.அன்புதுரை, மதன் மோகன், வினோத் வேலாயுதம், மாவட்டக் கழக நிர்வாகிகள் விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, அகஸ்டின் பாபு,

அணிகளின் மாநில நிர்வாகிகள் கென்னடி, கார்த்திக் மோகன், இறையன்பன் குத்தூஸ், குமரி விஜயகுமார், சந்திரபாபு, வி.பி.பொன்னரசு, வி.பி.மணி, ராம்குமார், அழகிரி சதாசிவம், கௌதமன்,

இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் குட்டி, இம்ரான் ஆருண், பாலச்சந்தர், தினேஷ்குமார், மோகனவேல், சார்பு அணிகளின் அமைப்பாளர் துபாய் விஜய், யோகேஷ்வரி சுந்தரேசன், லதா லாரன்ஸ், ரகமத்துல்லா, திருமலை பொன்னுரங்கம், அசோக்குமார், ராஜா, சீனிவாசன், ராஜராஜன், ரங்கராஜன், எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், அரவிந்த்குமார், டாக்டர் ஜீவகன் அய்யநாதன், பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார் உள்ளிட்ட வட்ட கழகச் செயலாளர்கள், கோ.ராணி ரவிச்சந்திரன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# திராவிடப் போராளிகள்

39

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**




## ‘கல்வி விளக்கு’ காந்தம்மா!

*1940-ஆம் ஆண்டின் தொடக்கக் காலத்தில் கல்வித் துறையில் அலுவலராகப் பணியாற்றி வந்த முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட ஓர் இளைஞருக்கு அஞ்சலில் ஒரு கடிதம் வந்தது. அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இளம் ஆராய்ச்சியாளர் பதவிக்கான கடிதமல்ல அது. மாறாக, ஒரு பெண்ணிடம் இருந்து வந்த கடிதம்.*

“நான் எனக்காக இக்கடிதத்தை எழுதவில்லை. என் தோழிக்காக எழுதுகிறேன். என் தோழியின் ஒப்புதலோடு இதை எழுதுகிறேன்.

ஒவ்வொரு முறையும் உங்கள் கண்ணில் நாங்கள்பட்ட நொடியில் நீங்கள் வேறு பக்கம் திரும்பி விட்டீர்கள்; எங்களை ஏறிட்டுப் பார்க்கவில்லை. மாறாக நாங்கள், சற்றுத் தொலைவில் இருந்தபடியே பலமுறை உங்களை கவனித்து இருக்கிறோம்.

உங்கள் உரையாடல்களில் இருந்து, நீங்கள் சமுதாயம் பொருளியல் பற்றி முற்போக்குக் கருத்துடையவர் என்று எங்களுக்குத் தோன்றியது. சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க அவாவுகிறீர்கள் என்று புரிந்தோம். ஒருமுறைக்குப் பலமுறை நீங்கள், உங்கள் நண்பரிடம் அப்படிக் கூறியதைக் கேட்டதால்தான் என் தோழிக்குத் துணிச்சல் வந்தது. இருப்பினும் தானே எழுதத் தயக்கம்.

என் தோழி தங்களை மணக்க விரும்புகிறாள். அக்கருத்தினை உங்களுக்குத் தெரிவிக்கவே, இக்கடிதத்தை நான் எழுதுகிறேன்...

எக்காரணம் பற்றியும் இதனை நீங்கள் விரும்பாவிட்டால், தயவு செய்து என்னையும் என் தோழியையும் மன்னித்து விடுங்கள்.....” என்று தொடர்கிறது அக்கடிதம்.

அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அந்த இளைஞர், இப்படி பதில் அஞ்சல் அனுப்பினார்.

“நம் பழமையான சங்க இலக்கியத்தில் தலைவி, தலைவன் மேற்கொள்ளும் காதலை, தோழியொருத்தி வழியாகச் சொல்லியனுப்புவதே மரபு என்று கற்றிருக்கிறேன். அதனால் உம்முடைய கடிதம் என்னை அதிர்ச்சியில் ஆழ்த்தவில்லை. மாறாக என்னை வியப்பில் மூழ்க வைத்தது... நான் பிறவி பற்றி, சமுதாய ஏணியின் உச்சிப் படிக்கட்டில் இல்லாவிடினும், அதற்கு அடுத்து நிற்பதைக் குற்றமாகவே கருதுகிறேன். அதேபோல், சாதியில் மேல்கீழ் பாராட்டாத ஒருவனோடு வாழ்க்கை நடத்துவதைப் போன்றே, செல்வத்தைப் பொருட்படுத்தாத, குவிக்க இசையாத ஒருவரோடு வாழ்க்கை நடத்த நேரிடும் என்பதை உம் தோழி உணர்ந்திருக்கிறாரோ என்னவோ. இதை உம் தோழிக்குச் சொல்லி, தேவைப்பட்டால் பதில் எழுதவும்”.

**இராஜாஜியின் குலக்கல்வி முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் சுயமரியாதைக் கொள்கையோடு பணியாற்றிய காந்தம்மா- சுந்தரவடிவேலு அவர்கள் குடும்பம் மிகுந்த தொல்லைகளைச் சந்தித்தது.**

### கற்றோரைக் கற்றோர் காமுறுதல்

அந்தக் கடிதத்தை எழுதிய தோழியின் பெயர் தெரியவில்லை. ஆனால், யாருக்காக எழுதப்பட்டதோ அந்தப் பெண்ணின் பெயர் காந்தம்மா. தாவரவியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று சென்னை பல்கலைக் கழகத்தில் முதுநிலை அறிவியல் ஆராய்ச்சி (M.SC) படித்துக் கொண்டிருந்தார்.

காந்தம்மாவின் தந்தை திருவாரூர் சுப்ரமணியம். தாயார் தங்கம்மாள். காந்தம்மாவின் தமக்கையார் பெயர் குஞ்சிதம், தங்கையின் பெயர் வெங்கடேசம்மாள். குஞ்சிதம் - குருசாமி அவர்களின் திருமணம்தான் தந்தை பெரியார் தன் சொந்த செலவில் நடத்திவைத்த முதல் சுயமரியாதைக் கலப்புத் திருமணமாகும்.

அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது என்றால், **நெய்யாடுப்பாக்கம் துரைசாமி முதலியாரின் மகனான சுந்தரவடிவேலு** என்பவருக்கு எழுதப்பட்டது. அவரோ ‘எந்தக் கன்னியின்பாலும் நான் காதல்கொள்ளவில்லையே ஒழிய, ஒரு கொள்கையின்மேல் தணியாக் காதல் கொண்டிருந்தேன். நான் பிறந்த சாதிக்கு மட்டும் உரியவனாக வாழ்வதில்லை; மனித சாதியைச் சேர்ந்தவனாகவே வாழ்வது என்னும் கொள்கைக்கு வாழ்க்கைப்பட்டுவிட்டேன்’ என்ற உறுதியுடன் இளம் வயதிலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்.

நெ.து.சுந்தரவடிவேலு என்ற பெயர் தமிழ்நாட்டின் கல்வித்துறை வரலாற்றில் அழிக்க முடியாத சாதனைகளைப் படைத்த ஒரு மாமனிதரின் பெயர் என்பது மிகையல்ல. கல்வித்துறை அலுவலராகவும் அதிகாரியாகவும் ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றி, சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக உயர்ந்தவர்.

### சமூகம் மகிழ தாலி

இளம்வயதிலேயே சாதி அமைப்பின் மீது வெறுப்புக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தவர்களோடு கொண்ட தொடர்பால் **‘குடி அரசு’** ஏட்டின் மீது பற்று கொண்டவர். **குத்தூசி குரு சாமி** அவர்களது நட்பினால் அவர்களது இல்லத்துக்குச் சென்று உரையாடிய சில செய்திகளைக் கொண்டே காந்தம்மா அவரை மணக்க விரும்பினார்.

காந்தம்மாவின் தந்தை இசை வேளாளர் சமூகத்தின் நிலையை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தம் பெண்களைப் பட்டதாரிகளாக, ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர்களாகச் சுயமரியாதையோடு வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வளர்த்தார். தந்தை பெரியார் மீது மட்டற்ற மதிப்புக் கொண்ட அவர், காந்தம்மாவின் திருமணத்தைப் பற்றித் தந்தை பெரியாரிடம் பேசினார்.

நெ.து.சுந்தரவடிவேலு அவர்களை நன்கு அறிந்தவரான தந்தை பெரியார், அவரோடு உரையாடல் நிகழ்த்தியதுடன், அவரது தந்தையிடம் பேசவும் முன்வந்தார். படித்தவர்கள் சாதியடுக்கின் மேல்நிலையில் இருப்பவர்கள் இத்தகைய மாற்றங்களை முன்னெடுத்தால் அது பெரிய கொள்கைப் பிரச்சாரமாகும் என்றார். ஆனால் நெ.து.சு அவர்கள் பிடிவாதமாக அதனை மறுத்து எளிய முறையில் பதிவுத் திருமணம் செய்யலாம் என்றார். கடைசியாக அவரிடம் தந்தை பெரியார் வைத்த கோரிக்கை வியப்பிற்குரியது. “தாலி மட்டும் கட்டுங்கள்” என்பதே அந்தக் கோரிக்கை.

“அந்த அடிமை அடையாளம் எதற்கு?" என்ற கேள்விக்குத் தந்தை பெரியார் "அந்தச் சமுதாயம் பெரிதும் ஏமாற்றப்பட்ட சமுதாயம். தாலி கட்டும் அளவு இசைந்தால் சிறிது நிறைவு இருக்கும்” என்றார்.

நெ.து.சு.- காந்தம்மா திருமணம் 25.10.1940 அன்று சென்னையில் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எளிமையான முறையில் நடைபெற்றது. அதற்காக அவர்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் 27.10.1940 அன்று சென்னை கோகலே மண்டபத்தில் நடத்தினார் தந்தை பெரியார்.

### மொட்டைக் கடித அச்சுறுத்தல்

அதன் பின் காந்தம்மா அவர்கள் சுயமரியாதை இயக்க நிகழ்வுகளிலும் பங்கேற்கத் தொடங்கினார். பல மாநாடுகளில் உரையாற்றினார். 1946-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே திராவிடர் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அதற்கிடையில் நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள் தந்தை பெரியாருக்கு நெருக்கமானவர் என்பதால், அவர் மீது புகார் சொல்லி அரசுக்கு ‘மொட்டைக் கடிதங்கள்’ சென்றன.

இராஜாஜியின் குலக்கல்வி முயற்சிகள் நடைபெற்ற காலத்தில் சுயமரியாதைக் கொள்கையோடு பணியாற்றிய காந்தம்மா- சுந்தரவடிவேலு அவர்கள் குடும்பம் மிகுந்த தொல்லைகளைச் சந்தித்தது. எனவே காந்தம்மா அவர்களால் முழுமையாக இயக்க நிகழ்வுகளில் பங்கேற்க முடியாமல் போயிற்று. ஆயினும் தந்தை பெரியாரின் பாதையில் இருந்து அவர் விலகவே இல்லை.

காந்தம்மா அவர்களுக்கு ஒரே மகன் பிறந்தார். அந்நாளிலேயே மகனுக்குக் கா.சு. திருவள்ளுவன் என்று தாயின் பெயரின் முன்னெழுத்தையும் பெயரிட்டனர். அந்த மகன் இளம் வயதில் இறந்துவிட்டார்.

### இளம்தலைமுறையைச் செதுக்கிய ஆசிரியர்

ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே பல்வேறு துறைகளில் பொறுப்பேற்று சிறந்த இளம்தலைமுறையை உருவாக்க உழைத்தார் காந்தம்மா. தமிழ்நாடு மாநிலப் பெண்கள் சாரணியர் இயக்கத்தின் ஆணையராகச் சிறப்பாகப் பணியாற்றினார். சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பல கல்விக் குழுமங்களின் ஆலோசகராக இருந்தார். தன் முயற்சியால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் (SYNDICATE) பேரவை உறுப்பினராக, பட்டதாரிகளுக்கான தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்.

இத்தனை பொறுப்புகளை ஏற்றபோதும் திராவிட இயக்கத்தின் கொள்கையினின்று வழுவாமல், தந்தை பெரியாரின் தொண்டராகவே வாழ்ந்த, காந்தம்மா அவர்கள் உடல்நலக் குறைவால் 1984 ஆம் ஆண்டு மறைந்தார். அவரது தொண்டுக்கு மரியாதை செய்யும் முறையில் 5.12.1984 அன்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களால் பெரியார் திடலில் நீதியரசர் வேணுகோபால் அவர்கள் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது.

பாய்ந்து வரும் பேராறு போல் உழைப்பவர்களைப் போன்றே ஓசையற்ற நீரோடை போல் உழைப்பவர்களும் சேர்ந்ததே திராவிட இயக்கம். அதன் வரலாற்றில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாமலே வாழ்ந்து முடித்த போராளிகளை நினைவூட்டுவதே காந்தம்மா அம்மையாரின் வாழ்க்கை.

(வருவார்கள்...)

## அயல் விவகாரங்களிலும் இந்தியாவில் வதந்திகள்!

இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை விவகாரம் உலகின் கண்முன் நிகழும் கொடூரமாக அரங்கேறி வருகிறது. ‘எங்களின் முழுபலத்தையும் பயன்படுத்தி யுத்தம் செய்கிறோம்’ என முழங்குகிறது இஸ்ரேல். மின்சாரம், உணவு, தண்ணீர் கிடைக்க வழியின்றி பாலஸ்தீன மக்கள் போருக்கும் வாழ்வுக்கும் இடையில் தவித்து வருகின்றனர். இந்த நிலையில், பாலஸ்தீன இயக்கங்கள் குறித்த வதந்திகள் இந்தியாவில் இருந்து அதிகம் பகிரப்படுவதாக அதிர்ச்சியான தகவல்களை, சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. பாலஸ்தீன இயக்கங்களுக்குப் பெண் குழந்தைகள் பாலியல் அடிமைகளாகக் கொண்டு செல்லப்படுகிறார்கள் என பள்ளி வாகனத்தைக் காட்டியும், ஹமாஸ் ஒரு யூதக் குழந்தையைக் கடத்திச் செல்வதாகவும் போலி செய்திகள், இந்தியாவில் இருந்து அங்கீகரிக்கப்பட்ட X பக்கங்களில் பகிரப்பட்டு, அவை பலராலும் மறுபரவல் செய்யப்படுகிறது. இந்தத் தகவல்கள் எதற்கும் ஆதாரங்கள் இருப்பதில்லை என உண்மை அறியும் தளங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இஸ்லாமியர்கள் மீதான வெறுப்புணர்வே, இந்தியாவில் இருந்து அதிக வதந்திகள் பகிரப்படுவதற்குக் காரணம் என்றும் செய்திகள் கூறுகின்றன. இந்த வதந்திகளுக்குப் பின்னால் யார் இருப்பார்கள் என்பதை நாம் குறிப்பிடத் தேவையில்லை. ஆளும் பா.ஜ.க. அரசு இஸ்ரேல் ஆதரவு நிலை எடுத்துள்ள நிலையில், அவர்கள் வளர்க்கும் வதந்திகளின் குழந்தைகள் என்ன செய்வார்கள் என நமக்குத் தெரியாதா?

## :.ப்ளாஷ்பேக்



### மின்சாரக் கோரிக்கை!

**த**மிழ்நாடு மின்சார வாரிய தலைமைச் செயலகத்தில் 1973 -ஆம் ஆண்டு பிப்ரவரி 20 அன்று ‘வாரிய தலைமைச் செயலகச் சங்க’ ஏற்பாட்டில், சங்கத்தின் 5-ஆம் ஆண்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தபோது “கோரிக்கை ஏதேனும் உள்ளதா?” என்று கேட்டார். “எதுவும் இல்லை நீங்கள் விழாவில் பங்கேற்றால் மட்டும் போதும்” என்றோம். விழா தொடங்குவதற்கு 20 நாட்களுக்கு முன்பே கவிஞர் கருணானந்தம் அவர்களைக் கோரிக்கை ஏதும் உள்ளதா என்று மீண்டுமொருமுறை விசாரிக்கச் சொல்லியுள்ளார் தலைவர். நாங்கள் 7 கோரிக்கைகளை எழுதி, அவரிடம் அளித்தோம். விழா நாளன்று தலைவர் கலைஞர் அதில் 5 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகத் தெரிவித்தார். எங்களுக்கெல்லாம் இது மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. உடன் அன்றைய மின்சாரத் துறை அமைச்சர் ஓ.பி.ராமன், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் எல். கணேசன் மற்றும் மின்சார வாரிய நிர்வாகிகள் இருந்தார்கள்.



தருமராசன்

**-மா.தருமராசன், தொழிலாளர் துணை ஆணையாளர் (ஓய்வு), ஒரத்தநாடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மருத்துவக் கட்டமைப்பு

**1966-இல் தமிழ்நாட்டிலிருந்த 9 மருத்துவக் கல்லூரிகளில் ஒன்று தனியார் கல்லூரி. மாவட்டங்கள் தோறும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கவேண்டுமென்ற தி.மு.க.வின் நோக்கத்தின் பலனாக, 2010-இல் எம்.பி.பி.எஸ் மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்லூரிகள் 17 ஆகவும், பி.டி.எஸ் மற்றும் செவிலியர் போன்ற இதர மருத்துவப் படிப்புக் கல்லூரிகள் 33 ஆகவும் அதிகரித்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 273




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.